# உறங்கா நிறங்கள்

**ஏ.என். கிருஷ்ணவேணி**
யாழ் பல்கலைக்கழகம்

மனித சமூகப்பண்பாட்டு வரலாற்றில் கடந்த நூற்றாண்டு விட்டுச் சென்ற பதிவுகளை, மீட்டுப் பார்க்கும் வேளை, புகழேந்தியின் 'உறங்கா நிறங்கள்' என்ற ஓவியக் காட்சி முக்கியத்துவம் பெறுகிறது. 21ஆம் நூற்றாண்டை உலகெங்கெனும் மக்கள் குதூகலமாகப் பல்வேறு எதிர்பார்புகளுடனும் எதிர்கொண்ட போதே, 21ஆம் நூற்றாண்டு பற்றி மீளுரு வாக்கம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழுகிறது. அதற்குக் களம் அமைந்தது போல் அண்மையில் லலித் கலா அகடமியில் காட்சிப் படுத்தப்பட்ட ஓவியங்கள் சிந்தனைக்கும் ரசனைக்கும் வழிவகுக்கின்றன. அச்சிந்தனைக்கு வித்திட்ட ஓவியர் புகழேந்தியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அவர் தன் கலைப்படைப்பிற்குப் பொருளாக எடுத்துக் கொண்ட விடங்கள், சம்பவங்கள் யாவுமே மனித செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை. மனிதனுக்குள்ளே உறங்கிக்கிடந்த ஆற்றல்களின் வெளிப்பாட்டைத் தன் 'உறங்கா நிறங்களாக நெருப்பு வண்ணங்களில் வரைந்து, நெஞ்சை நெருடவும் நெகிழவும் வைத்தவர் ஓவியர் புகழேந்தி. சம்பவங்கள் இன்பமானவையோ, துன்பமானவையோ அவற்றை மீட்டுப் பார்த்து அனுபவிப்பது மனிதனின் இயல்பு. அதிலும் காதல், சோகம், வீர ரசங்கள் மனிதனை எளிதில் தன்வயமாக்குபவை. கலையுள்ளம் படைத்தவர்களின் பார்வைக்கும், அனுபவத்திற்கும் விடயமாகிப்போன சம்பவங்களும், நிகழ்ச்சிகளும், அவர் தம் அனுபவத்தோடு புதுவடிவம் பெற்றுவிடும் என்பதை புகழேந்தி உறங்கா நிறங்களில் உண்மையாக்கி விட்டார்.

அவர் வடித்துத்தந்த வண்ணங்கள் ஒவ்வொன்றும் எம்மை அந்நிகழ்ச்சிகள் இடம் பெற்ற நிலத்திற்கே அழைத்துச் செல்வதுடன் அச்சம்பங்களுடன் எம்மை ஒன்றவும் வைத்து விடுகின்றன.

உலகில் மக்கள் அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்கு உட்படும் போதெல்லாம் சுதந்திர வேட்கை கொண்டு, பலமான எதிர்ப்புணர்வை வெளிப்படுத்திப் போராடிய வரலாறுகள் ரஷ்யா, க்யூபா, பாலஸ்தீனம் முதல் ஈழம் வரையான, இடையுறவு படாத, தொடர்ச்சி யாக ஓவியங்களின் வெளிப்பட்டமை, 21ஆம் நூற்றாண்டில் கால் பதிக்கும் வேளை மேலும் தொடரும் போராட்டங்களாக தீர்க்க தரிசனப் பதிவுகளாக, காட்சியளிக்கின்றன.

பார்வையாளர், ரசிகர்களைப் பொறுத்தமட்டில் கலை அனுபவம் என்பது கலைப் படைப்பைப் புரிந்து கொள்வதன் மூலம் ஏற்படுவது. கலையினால் வெளிப்படுத்தப்படும் பல்வேறு உத்திகள், கலை ரசனைக்குக் காரணமாகின்றன. ரசிகனும் கலைஞனை ஒத்த கலையுள்ளம் படைத்தவனாக இருக்கும் பட்சத்தில் 'ரசனை' எளிமையாகி விடுகிறது. அத்தகைய ரசிகர்கள் 'சுமனசர்', சஹ்ருதயர் போன்ற பெயர்களினால் அழகியல் சாஸ்திர நூல்களில் அழைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. கலைஞனும் (Artist) ஒரு வகையில் ரசிகனே, தான் பார்த்து ரசித்த அவனுள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், கலை வெளிப்பாட்டிற்கு உந்துதலைக் கொடுப்பதுடன், ஆக்கத்திறன் மூலம் (Creativity) அழகிய கட்டடங்களாகவோ, ஓவியமாகவோ, சிற்பமாகவோ, கவிதையாகவோ வடிவம் பெற்று விடுகின்றன.

இந்த வகையில் ஓவியர் புகழேந்தி தனக்கேயுரிய கலைப்பாணியில், மனிதப் போராட்டங்களையும், அதன் பல்வேறு கூறுகள், பரிமாணங்கள், அவற்றின் விளைவான

அவலங்களையும் அவற்றுக்கேற்ற வண்ணங்களில் வடிவமைத்துள்ளார். பார்வையாளர் புரிந்து கொள்ளும் வகையிலும் (Familiarity) (புதுமை உணர்வுடனும்) (Novelty) ஓவியங்களை வெளிப்படுத்திய பாங்கு பாராட்டுக்குரியது.

களத்திற்கால் பதிக்காவிட்டாலும், போராளிக்குரிய வேகத்துடன் பேனா முனைகளும், தூரிகைகளும் துப்பாக்கிகளாய் முளைத்த வித்தையை அவர் ஓவியங்களில் காணலாம்.

21ஆம் நூற்றாண்டில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் சந்தித்த நெருக்கடிகள், அவற்றிற்கு முகம் கொடுக்க அவை கையாண்ட அரசியல் யுக்திகள், இதன் விளைவாக அந்நாடுகள் அனுபவித்த அவலங்கள் நேற்று நடந்தது போன்று பசுமையாய் பதிய வைத்த ஓவியக் காட்சி, சமகாலப் பிரச்சினைகளின் தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. விடுதலைப் போராட்டம், வீறு கொண்ட தலைவர்கள், வெற்றிப்பாதையை நோக்கிய அவர்களின் பயணம், மக்களின் சகிப்புத்தன்மை, வீடிழந்து, நாடிழந்து, வீதிகளில் அலைந்தாலும், இலட்சிய வேட்கையோடு, ஜீவ மரணப்போராட்டத்தை எதிர்கொண்ட தன்மை, அவல நிலைகளில் தம்மையே சேவைக்காய் அர்ப்பணித்துக் கொண்ட அன்னை திரேசா, இத்தனை சோகங்களிடையேயும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகளின் வெளிப்பாடு, பெண்ணியம், பசி, பஞ்சம் பட்டினி, மரணம் என்று மனிதனைச் சூழவுள்ள சகல பிரச்சினைகளையும் தம் தூரிகைக்கு விஷயமாக்கியுள்ளார் புகழேந்தி, உண்மையான கலைஞன், கொடூர சம்பவங்களைப் பார்த்து வாய் மூடி, மௌனியாய் இருப்பவன் அல்லன். மக்கள் பேசப்பயப்படும் விடயங்களையே துணிச்சலோடு வெளிப்படுத்து வான். அந்த வகையில் உறங்கா நிறங்கள், பேசும் ஓவியங்களாப் பரிணமிப்பவை.

இளமைக் காலக் கனவுகளை எருவாய் மண்ணில் புதைத்த மாவீரர்கள், மரணிப்பதில்லை. அவர்கள் மண்ணில் புதைக்கப்பட்டவர்கள் அல்ல. விதைக்கப் பட்ட வர்கள் என்ற தத்துவத்திற்கு வடிவம் கொடுத்த ஓவியம், அவரது சிந்தனையை சிதறாமல் வெளிப்படுத்துகிறது.

சுதந்திர தாகத்தைத் தூண்டி, மக்களை வீறு கொண்டெழச் செய்த வங்கத்துக் கவிஞர்களையும் அவர் மறக்கவில்லை. அத்தகைய சுதந்திர வேட்கையால், கொலைக் கயிறை முத்தமிட்ட வீரர்கள் அவரது ஓவியத்தில் அழியா இடம் பெற்றுவிட்டனர். மொழியுரிமை மறுக்கப்பட்டபோது மக்கள் தம் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தி, தம்மையே தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிய சம்பவம் மனதில் வேதனையைத் தூண்டுகிறது. அகிம்சை வழியில் ஒரு பெரும் சாம்ராஜ்யத்தையே அசைத்த மேதை மகாத்மா அவரது ஓவியத்தில் உயிர்ப்புப் பெறுகிறார்.

அண்டை நாடுகளில் இடம் பெற்றவன் செயல்களும், கொடூரங்களும் அவர் தூரிகைக்குத் தப்பவில்லை. மனிதனது அடிப்படைத் தேவைகள் உரிமைகள் மறுக்கப்பட்டுச் சொந்த மண்ணில் அகதியாகப் போனவர்கள், புகழேந்தியின் ஓவியத்தில் கதாநாயர்களாகத் தோன்றும் காட்சி , மனதை உருக்குகிறது.

மண்ணில் உயிர்வாழ, ஒரு துளிபாலுக்கு ஏங்கும் ஒட்டிய உடல், காய்ந்து போன மார்பகங்களைச் சுவைக்கும் காட்சி உலகில் இடம்பெறும் கொடுமைகளின் எல்லையே தரிசிக்க வைக்கிறது.

எத்தனை புதிய நூற்றாண்டுகள் தோன்றினாலும், சந்திரனில் கால்பதித்ததாலும் 'பெண் வெறும் போகப் பொருளே, அதட்டியும், அடக்கியும் அவளை அனுபவிக்க முடியும்' என்று என்னும் ஆணாதிக்கர்களுக்கு சவால்விடும் பெண்ணின் புரட்சித் தோற்றம், சமூக ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமாய், வெளிப்பட்டுத் தோன்றுகிறது. பெண்கள்

குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் பெற்று வரும் வேளையிலும், அவர்கள் பாதுகாப்பற்றவர்களாய், ஆதிக்கத்திற்கும், அதிகாரத்திற்கும் அடிமைப்படுத்தப்பட்டு, நடைபெறும் பாலியல் வல்லுறவுகள், படுகொலைகளை, எதிர்த்து தன்னிருப்புக்காக போராடும் ஆக்ரோஷம் சமூக பிரக்ஞையுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

போராட்டங்கள், போர்க்காலச் சூழல்களிலும் பாதிக்கப்படுபவள் பெண்ணே அதிகார வர்க்கத்தின் முன்னும், ஆயுத பாணிகளின் முன்னும் பெண்ணின் நிர்வாணக் காட்சிகள் ஆணின் வக்கிரத் தன்மையைப் பறைசாற்றுபவை.

அதிகார வெறியர்களின் வன்செயல்கள் மட்டுமல்ல, இயற்கையின் சீற்றங்களும் காலத்திற்குக் காலம் அழிவுப் பாதைக்கு வழிவகுக்கும் ஒரிசா மண்ணில் புயலின் கோர தாண்டவங்கள் பதித்த சுவடுகள் மனிதனைச் சூழ உள்ள பயங்கரங்களாய் மனதை உறுத்துகின்றன.

நவீன ஓவியத்தின் தந்தையை ஓவியமாக்கி, கலைஞர்களின் சமூகப் பங்களிப்பையும் மறக்காது வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மனிதனைச் சூழவுள்ள அத்தனை விடயங்களையும் தன் ஓவியத்திற்குக் கருவாக்கி, மனித அவலங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த தியாகிகளையும் நினைவு கூர்ந்து, அவர் தம் சுயத்தை உணர்த்தி, அவர்களை தலை நிமிர்ந்து வாழவழி வகுத்த மேதைகளையும் ஓவியப் பதிவுகளாக்கி உயர்ந்து நிற்கும் புகழேந்தி அனைவரது பாராட்டுக்கும், வாழ்த்துக்கும் உரியவர் என்பதில் சந்தேகமில்லை.

சமூகப் பண்பாட்டு வரலாற்றில், சமூக உறவுகளுக்குக் காரணமான மொழி போன்று, கலையும் தொழிற்படுகிறது. வரலாற்றுப் பதிவுகளாகவும், ஆவணங்களாகவும் விளங்கும் கலை வடிவங்கள் மனிதப் பண்பாட்டை வெளிப்படுத்துபவை. எனவே மனித வரலாற்றில், மனித உருவாக்கமான கலை பிரதான இடத்தை வகிப்பதுடன், கலைஞர்களும் போற்றுதலுக்குரியவர்கள். அந்த வகையில் 20ம் நூற்றாண்டில் இடம் பெற்ற சமூக, அரசியல், பொருளாதாரச் சம்பவங்களைப் பதிவு செய்ததன் மூலம் ஓவியர் புகழேந்தி தன்னிருப்பை உறுதிப்படுத்தியுள்ளார்.

தஞ்சாவூரிற் பிறந்து, குடந்தை ஓவியக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து, ஐதராபாத் பல்கலைக்கழகத்தில் முது நிலைப் படிப்பையும் முடித்த புகழேந்தி சென்னை, ஐதராபாத், டெல்லி, லக்னோ, பெங்களூர், மும்பை போன்ற நகரங்களில் தேசிய அளவிலான கண்காட்சிகளை நடத்தியதுடன், பல்வேறு விருதுகளுக்கும் உரியவர்.

பல்வேறு தனி மனிதக் கண்காட்சிகளை நடத்திய இவர் 'எரியும் வண்ணங்கள்' என்ற நூலை 1994ல் வெளியிட்டுள்ளார். இவை அவரது ஓவிய ஈடுபாட்டை வெளிப் படுத்துவன.

–தாமரை, மார்ச் 2000



# பூப் பூக்கும் விரல்கள் !!

**அக்கினி**

எண்ணச் சாறுகள் எழுதுகோல் முனையில் வழியும் போது இலக்கியம் பிறக்கிறது. வண்ணச் சாறுகள் தூரிகை முனையில் வழியும் போது ஓவியம் பிறக்கிறது. இந்த இருவகை வினைப்பாடுகளுக்கும் பின்னணியில் இருப்பது ஒரே வகையான உந்துதல்தான். அந்த உந்துதலைத்தான் கவித்துவம் என்கிறோம்.

இன்றைய யுகத்தில், மனிதன் குரல்தான் மகேசன் குரல் என்பதால்தானோ என்னவோ, ஓவியத் தூரிகைகள் இப்போதெல்லாம் மனிதத்தை அதிகம் தொட்டுத் தீட்டுகின்றன. ஓவிய உலகம் நவீனப்பட்ட போது அது அழகியல் பூங்காவில் இருந்துகொண்டு உலகியல் என்ற நடைமுறையை ரசித்துத் தீட்டத் தொடங்கியது. அந்த ரசனை, எப்படி இலக்கிய உலகத்தைப் புரட்டிப் போட்டு, அரண்மனை சமாச்சாரமாக இருந்த இலக்கிய வனப்பை மானுடம் பாட வைத்ததோ, அப்படி ஓவியமும் மானுடத்தைப் படைக்கத் தொடங்கியது. "உங்கள் தூரிகைக்கு எது விருப்பம்?" என்று கேட்டேன். "என் தூரிகைக்கு மனிதனைப் பிடிக்கும்." அவனது பிரச்சினைகளை - அவலங்களை - போராட்டங்களை - வெற்றிகளை - விலாசங்களை தீட்டத் துடிக்கிறது எனது தூரிகை என்கிறார் ஓவியர் கு.புகழேந்தி.

கோடுகளின் நவீனங்களில் புதினங்களையே சிறைபிடித்து வைக்கும் ஒரு ராஜ பரம்பரை இவர் என்று சொல்லாம். தமிழகம் கண்டெடுத்த தலை சிறந்த தூரிகைகளில் இவரும் ஒருவர்.. புகழேந்தியின் விரல்களில் பூப்பூக்கும்... புயலடிக்கும்.. குயில் கூவும்... கொடும்பசியின் வெய்யில் தாக்கும்.. மனுஷத்தை நேசித்து ஒரு சர்வதேச கொடி பறக்கும்... மானுடத்தின் விரோதிகளை மாய்க்கும் வகையில் விரல் விசைகளில் தோட்டாக்கள் சிதறும். வறுமைக் கோலம் கண்டு தூரிகை முனையில் துளிர்க்கும் கண்ணீர்.. !

இவையெல்லாம், இதயத்தின் ஆழத்தில் புதைபொருளாய், உணர்வுகளையும் எண்ணங்களையும் பேனா கொண்டு செதுக்கி எடுப்பவன் எப்படி கவிஞனாகிறானோ, அப்படியே தூரிகை கொண்டு துல்லியப்படுத்துபவனும் கவிஞனாகிறான். சிற்றுளி கொண்டு, உயிர்மை ததும்பும் சிலைகளை வடிப்பவனும் கவிஞனாகிறான். இங்கே உணர்வை வெளிப்படுத்துகின்ற சாதனங்கள் வெவ்வேறே தவிர அந்த உணர்வு என்று சொல்லலாம்.

ஆயினும், ஆயிரம் வார்த்தைகளைக் கொட்டிக் குவித்து உணர்த்த முடியாத உன்னதங்களின் உச்சத்தை ஒற்றை வரிக்கோடுகளால் உணர்த்த முடியும் என்பதையும் நம்மால் உணர முடியும் என்பதையும் நான் உணர்ந்து இருக்கிறேன். அந்தக் கோடுகளின் பிரம்மரிஷிகளாக ஓவியர்களைத் தான் சொல்ல வேண்டும்.

பிரம்மனே ஓவியர்களின் தலைமகன். இந்தப் பிரபஞ்சங்களிலும் சரி, இந்தப் பிரபஞ்ச லோகங்களுக்கு அப்பால் உணரப்படும் ஆத்மலோகங்களிலும் சரி, படைப்பின் நாயகனாய் விளங்கும் பிரம்மனே சிறந்த ஓவியன் என்பதை யாரும் மறுக்க முடியாது.

படைப்பாளிகள் தான் உண்மையில் பிரம்மனின் வழி வந்தவர்கள். அந்தப் படைப்பாளிகள் மத்தியில் பிரம்மனின் அருட்கடாட்சம் பெற்ற ரிஷிமகர்களாய் விளங்குபவர்களில் ஓவியர்களுக்கு ஒரு தனி இடம் உண்டு.

தெய்வ ஆளுமைக்கு உட்பட்டவை ஓவியங்களும் தூரிகைகளும் என்ற பொன்யுகம் மாறிப் போய்விட்டது.

மென்பொருள் எனும் மனித நேயத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்ற எந்த உயிர்க்கும் பொருந்தும் என்றாலும் 33 வயதில் தமிழ்மக்களின் மனங்களில் தூரிகை

ஆட்சி நடத்தும் புகழேந்திக்கு இந்தப் புகழ் ஏந்தல் பொருந்தும். தமது ஒற்றுச் சேர்க்கையில் உயிர்ப்பித்து இருக்கும் தனது 37 ஜீவன்களுடன் புகழேந்தி மலேசியா வந்திருக்கிறார். இங்கே ஜீவன்கள் என்று நான் குறிப்பிடுவது அவரோடு இங்கு வந்திருக்கும் 37 ஓவியங்களைச் சொல்கிறேன்.

தமிழகத்தின் பல பகுதிகளில் ஓவியக் கண்காட்சி நடத்தி, மக்களின் மனங்களைக் கவர்ந்த புகழேந்தி, கடல் கடந்து ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்காக மலேசியா வந்திருக்கிறார்.

ஒரு தூரிகையின் உறங்காத நிறங்கள் என்ற தலைப்பில் வரும் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் ஓவியங்களைக் கொண்டு இந்தக் கண்காட்சிகளை அவர் நடத்தினார். அந்த ரசிக உள்ளம், மலேசிய மண்ணில் தனது ரசனையை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள வந்திருக்கிறது.

கோலாலம்பூர் சென்ட்ரல் மார்க்கெட்டில், ஒரு குறுகிய பகுதியில் தனது ஓவியங்களைக் கண்காட்சிக்கு வைத்துவிட்டு, குறுகுறுத்த சிந்தனையோடு நின்றிருந்த புகழேந்திக்கு எதிர்பாராத அதிர்ச்சி. அத்தனையும் இன்பப் பூ வீச்சுகளாய் இருந்தன.

அதிகமான அளவில் தமிழர் அல்லாதார் திரண்டு, அந்த ஓவியங்களை ரசித்து ரசித்துப் பார்த்து, அந்தப் பூக்களைப் புஷ்பித்த - அந்தப் புயல்களைக் கிளப்பிய விரல்களைப் பற்றிக் குலுக்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டது அவரே எதிர்பாராத விஷயம். அந்தக் கண்காட்சிக்கு வருகை புரிபவர்களுக்காக வைக்கப்பட்ட கையேட்டில் சீனர்களும் மலாய்க்காரர்களும் தங்களின் கருத்து என்ன? என்பதை மிக விரிவாய் சுட்டிக் காட்டிச் சென்றது புகழேந்திக்கு மிகவும் பிடித்திருந்தது என்பதை அவரே சொல்கிறார்.

“ஒரு குறுகிய இடத்தில் எப்படி ஓர் ஓவியக் கண்காட்சியை வெற்றிகரமாய் முடிக்கப் போகிறோம் என்ற குறுகுறுப்பு எனக்கு முதலில் இருந்தது. ஆனால் பரவலான மக்கள் கண்காட்சிக் கூடத்திற்கு வந்து ஓவியங்களை ரசித்த விதம் என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டது. குறிப்பாக மலாய்க்காரர்கள் ஓவியங்களைப் பற்றி நிறைய தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆர்வத்துடன் விசாரிக்கிறார்கள். நிறைய உள்ளூர் ஓவியர்கள் குறிப்பாக மலாய் சமூக ஓவியர்கள் வந்திருந்து ஓவியங்கள் பற்றி நிறைய விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். நான் மீண்டும் புதிதாய்ப் பிறப்பெடுத்தது போன்ற ஒரு பிரமைக்கு உள்ளாகிவிட்டேன்” என்கிறார் ஓவியர் புகழேந்தி.

அவருடன் நேர்காணலுக்காய் சிறிது நேரம் செலவிட்ட போது...!

■ **“எந்தக் கோடும் ஒரு புள்ளியிலிருந்து தான் புறப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் உங்களை ஓவியனாக்கிய அந்தப் புள்ளி எது?!”**

நிச்சயமாக அந்தப் புள்ளி நான் முதன் முறையாகப் பென்சில் பிடித்த அன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும். எனக்கோ, என்னைப் பெற்றவர்களுக்கோ, அல்லது போதித்த ஆசிரியர்களுக்கோ நான் பென்சில் பிடித்து இழுத்த கோடு ஓவியமாகத் தெரிந்திருக்கிறது. ஆனால், நான் இங்குதான் ஓர் ஓவியனாய் உதயமாகிறேன் என்று...!

ஐந்தாறு வயதில் எனது கோடுகள் கொஞ்சம் ஓவியங்கள் போல் வளையத் தொடங்கின. பிறகு பத்துப் பதினொரு வயதில், பாடப் புத்தகங்கள், இதர சஞ்சிகைகளில் காணப்பட்ட ஓவியங்களைப் பார்த்து வரைகிற பக்குவம் வந்தது. 14 வயதில் முடிவாகிவிட்டது, இனி நான் ஓர் ஓவியன் என்பது...! எனது எதிர்காலம் ஓவியத்திற்குள் ஒளிந்திருக்கிறது என்பதை உணர்ந்து திட்டவட்டமான முடிவை மனதுக்குள் திணித்துக் கொண்டுவிட்டேன்.

இதன் காரணமாக, பள்ளிகளிலும் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் நடக்கும் ஓவியப்

போட்டிகள் எதுவானாலும் நான் முதல் பரிசுடன் வீடு திரும்பத் தொடங்கினேன். ஆசிரியர்கள் பாராட்டினார்கள். சக மாணவர்கள் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடினார்கள். எனது சின்னஞ்சிறு கிராமத்து மக்கள் எனது ஓவியத்திறனை மெச்சிப் பேசினார்கள். ஆனால், ஒரே ஒருவரைத் தவிர... அவர் தான் என் தந்தை. ஓவியக் கல்லூரியில் சேருவதை லட்சியமாகக் கொண்டிருந்தேன். ஆனால், இதில் எல்லாம் வாழ்க்கையைத் தொலைத்து விடாதே என்று கடிந்து கொண்டார். ஓவியம் சோறு போடாது என்றார். எதிர்காலம் இதில் இல்லை என்றார். இஞ்ஜினியர் அல்லது டாக்டர் படிப்புக்கு முயற்சி செய் என்று கடிந்து கொண்டார்.

■ **“இஞ்சினியர் அல்லது டாக்டர் என்று உங்கள் தந்தை சொல்கிற அளவுக்கு ஓர் ஓவியப் பிரியரான உங்களுக்கு படிப்பு வெற்றிகரமாக அமைந்ததா?**

*எனக்கு இதுவொரு வித்தியாசமான அனுபவம். பல சந்தர்ப்பங்களில் ஓவியத்தில் சிறந்து விளங்குகின்ற மாணவர்கள் படிப்பில் சிறப்புடன் விளங்க மாட்டார்கள். ஆனால், நான் இரண்டிலுமே சிறந்து விளங்கியதால் என் தந்தை ஓவியத்தைத் துறந்து விட வேண்டும் என்று வற்புறுத்தினார்.*

■ **முடிவு என்னவாயிற்று?”**

*முடிவில் வெற்றி, எனக்கு...! காலப்போக்கில் இந்த மறைமுகப் போராட்டத்திற்கு இடையே என் தந்தையை சந்தித்த ஆசிரியர்கள், பிரமுகர்கள், உள்ளூர்க்காரர்கள், உறவினர்கள் என்று பல தரப்பினரும் “புகழேந்திக்கும் ஓவியம் தான் நல்லா வருதே விட்டுட வேண்டியதுதானே” என்ற அன்பு நச்சரிப்பு செய்த போது அவர் பணிந்து விட்டார்.*

*பிறகு 16வது வயதில் ஓவியக் கல்லூரியில் பட்டப்படிப்புக்காகச் சேர்ந்தேன். படித்தேன். பிறகு ஓவியத்திலேயே எம்.ஏ. பட்டப்படிப்பை முடித்தேன். ஓவியக் கல்லூரியில் மாணவர்களுக்குப் போதிக்கும் பணியைச் செய்தேன்.*

■ **“ஓவியனுக்கு எதிர்காலம் இல்லை என்று உங்கள் தந்தை கருதியதை தவறு என்று சொல்வீர்களா?”**

*அப்படிச் சொல்லிட முடியாது. ஒரு தந்தைக்கு இருந்த பொறுப்புணர்வின் வெளிப்பாடு அது. அந்த நேரத்தில் அப்படியொரு நிலை தமிழகத்தில் இருந்தது என்பது உண்மை. காலத்தின் துரித மாற்றம் என் தந்தையின் அன்றைய கருத்தை இன்று தவறாக்கி விட்டிருக்கிறது. மேலும் இதில் வெற்றி, தோல்வி என்பதெல்லாம் அந்தந்த மனிதனின் தனித்துவத்தைப் பொறுத்தது. எனது ஓவியங்களின் தனித்துவம், ஈடுபாடு, முயற்சி என்னை வெற்றியாளனாக்கி இருக்கலாம். எனது காலத்தில் என்னைப் போல் ஓவியத்தைத் தேர்ந்தெடுத்தவனின் வாழ்க்கை தொய்ந்து போயிருக்கலாம். அதற்குத் தனித்துவம் தான் காரணமாக இருக்க முடியும்.*

*இன்னொரு விஷயம் - என் தந்தை ஓவியத்தைப் பற்றி அன்று மாறுபட்ட கருத்து கொண்டிருந்த போது, கணினியுகம் என ஒன்று வரும் அந்த நவீன தொழில் நுட்பம் பாய்ந்து வறண்ட பூமி செழிக்கும் என்றெல்லாம் அவருக்குத் தெரியாது. இன்றைக்கு கணினி தொழில் நுட்பம் ஓவியனை உச்சநிலைக்கு கொண்டு சென்று கொண்டிருக்கிறது. பல ஓவியர்கள், கணினியை பயன்படுத்தி பல முனைகளில் தங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் கணினித் துறையில் அதிக அளவில் ஓவியர்கள் வரவேற்கப்படு கிறார்கள்.*

■ **“தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஜனரஞ்சகமான சஞ்சிகைகளில் ஜனரஞ்சகமான ஓவியங்களைத் தீட்டுபவர்களுக்கு அப்பால் வாழ்கிற ஓவியர்களின் வாழ்க்கையில் தர்மசங்கடம் தட்டுப்படவில்லையா?”**

*சிலரது விஷயங்களில் அப்படி இருக்கலாம். ஓவியம் என்பது ஒரு ரசனை. ஒரு கலை. ஆனால் தமிழகத்தில் இன்றைக்கு நிலைமை மாறி வருகிறது. ஜனரஞ்சகமாக வரைகிற ஓவியர்கள் நிறைய பின் தங்கிவிட்டார்கள். நவீனத்துவமும் தனித்தன்மையும் கொண்ட ஓவியர்கள் மிகவும் வரவேற்கப்படுகிறார்கள். இது ரசனையால் ஏற்பட்ட மாற்றம். மக்களின் ரசனையும் மாறிக் கொண்டே இருக்கிறது.*

*இலக்கியத்தைப் போலவே ஓவியத்திலும் புதுமை பெரிதும் வரவேற்கப்படுகிறது. அதற்காகப் பழைய அணுகுமுறைகளைக் கொண்ட ஓவியங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று நான் சொல்லவில்லை. அவை, மிகவும் ஆரவாரமின்றிப் போற்றப்படுகின்றன. அவ்வளவே!*

■ **உங்களின் தனித்துவம் என்ன?**

*எனது தனித்துவம் மனிதன்தான்... மனிதனை மனிதனுக்குள் நிலவும் முரண்பாடுகள், சிக்கல்கள் ஆகியவற்றை எனது தூரிகைகளுக்குள் கொண்டு வருகிறேன். இது உலகம் முழுவதும் பார்க்கப்பட வேண்டிய விஷயம். ஒட்டுமொத்தமாக உலக மானுடத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்குதல், அடக்குமுறைகள், புறச்சூழல் பாதிப்புகள் ஆகியவற்றைக் கூர்ந்து கவனிக்கிறேன். இவை எனக்கு வெற்றியை அளித்திருக்கின்றன.*

*எத்தனையோ விதமாக வரைந்து கொண்டுதான் இருக்கிறேன். ஆனாலும் சமூக நோக்கில் மானுடச் சிக்கல்களை ஓவியங்களில் அணுகுவதுதான் எனக்குப் பிடித்தமான அம்சமாக விளங்குகிறது. நெருடலில் இருக்கின்ற மனிதன் பக்கத்தில் நின்று அவனது நெருக்கடியைப் புரிந்து கொண்டு அதனை ஓவியமாக மொழியாக்கம் செய்வதில் தான் எனது ஈடுபாடு ஒளிந்து கொண்டிருக்கிறது. இதுதான் என் கலைக் கோட்பாடு. மக்களிடம் இதனைக் கொண்டு சென்று அவர்களிடையே சிந்தனைக் கிளர்ச்சிக்கு வழிகோலுவதாக, தூண்டுவதாக இருக்க வேண்டும் என்பதே நோக்கு.*

■ **“கவிஞனோ, ஓவியனோ, அது எழுதுகோலே, தூரிகையோ எதுவானாலும் பெண்களை நோக்கியே இருக்கும். அழகுப் பதுமைகளின் தாக்கத்தில் இருக்கும் என்று பொதுவாக மக்கள் நினைக்கிறார்கள். உங்களின் தூரிகை பெண்கள் விஷயத்தில் எப்படி இருக்கும்?”**

*அழகு எல்லோருக்கும் பொதுவானது. அது பார்க்கப்படும் விதத்தில் இருக்கிறது. பெண்களை வெறும் அழகுப் பொருட்களாக அணுக நான் விரும்புவதில்லை.*

*அவர்கள் உலகின் ஆணிவேர்கள். உலகின் சூட்சுமமே அவர்கள்தான். அவர்களை அழகு என்கிற அம்சத்திற்காக மட்டுமே தூரிகை தொடுவதை நான் வெறுக்கிறேன். அவர்கள் முன்பு இருத்தி வைக்கப்பட்டிருந்த அழகுப் பெட்டகங்களை உடைத்துக்கொண்டு வெளிக்கிளம்பி வெகுகாலம் ஆகிவிட்டது. அவர்கள் போராட்ட வாழ்க்கைக் களத்திற்குள் புகுந்து விட்டார்கள்.*

*ஈழத்துச் சகோதரிகளை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ்ப் பெண்ணியத்திற்கும் உலகப் பெண்ணியத்திற்கும் இவர்களை விடச் சிறந்த முன்னோடி இருக்க முடியாது. இவர்களை விடச் சிறந்த பெண்ணியப் போராளிகள் இருக்க முடியாது.*

இன்றைக்கு ஈழத்துச் சகோதரிகளின் அழகை, போதைக்காக வர்ணிக்க எந்த பேனாவுக்காவது ( அதாவது ஈழத்துக் கவிஞனுக்கும் சரி, தமிழ்நாட்டுக் கவிஞனுக்கும் சரி) துணிச்சல் இருக்கிறதா? வீரம் விளைந்த பெண்மை அது. வீரம் விளைந்த இலக்கியம் அது. ஈழத்துச் சகோதரியைப் பூவோடு ஒப்பிட்டுக் கவிஞன் புலம்ப முடியாது. அவர்களைப் பூவாகக் காட்ட முனைகிற தூரிகையில் காளான் பூத்துவிடும். அவர்களின் வீரம் பேசப்பட வேண்டும். பெரும்பாலும் எனது ஓவியங்களில் வருகின்ற பெண்கள், அழகு அணிகலன்கள், பூ, பொட்டு இல்லாமல்தான் இருப்பார்கள். அவர்கள் ஒப்பனை செய்து கொள்ளவும் பூவைக்கவும் நேரமில்லாதவர்கள். என் ஓவியப் பெண்கள் அணிகலன்களுக்கு ஆசைப்படாத போராளிகள்.

■ **உங்களின் ஓவியக்கண்காட்சியை மலேசியாவில் நடத்த முனைந்ததன் நோக்கம் என்ன?**

தமிழகத்தில் ஒரு தூரிகையின் உறங்கா நிறங்கள் என்ற தலைப்பில் 20ஆம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகளை ஓவியங்களாக்கி கண்காட்சி நடத்தினேன். மிகச் சிறந்த வெற்றி கிடைத்தது. பத்திரிகைகள் ஒரு முகமாகப் பாராட்டின. பிறகு இத்தகைய ஓவியங்கள் உலகளாவிய, குறைந்த பட்சம் தமிழர்கள் வாழும் தேசங்களிலாவது நடத்தப்பட வேண்டும் என்று சில சஞ்சிகைகள் கருத்துரைத்த போது அந்த எண்ணம் எனக்குள்ளும் பரவியது. இதன் முதல்படி தான் மலேசியா. அடுத்தடுத்து எங்கே நடத்துவது என்பதை மலேசியப் பயணத்தை முடித்துக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டும்.

■ **“20ஆம் நூற்றான்டின் முக்கிய நிகழ்வுகள் என்று குறிப்பிடுகிறீர்களே, அப்படியானால் நீங்கள் தீட்டியிருக்கும் 37 ஓவியங்களுக்குள் 20ஆம் நூற்றாண்டை அடக்கிவிட முடியுமா?”**

முடியாது என்பது ஒரு விஷயம். முயற்சித்திருக்கிறேன் என்பது ஆறுதல் தரும் விஷயம். இதில் கூட சில முக்கிய நிகழ்வுக்குக் காரணமானவர்கள் பலர் இடம் பெறவில்லை என்பதற்காக வருந்துகிறேன். அந்தந்தக் காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சில அம்சங்கள் குறித்து ஓவியமாக்கி இருக்கிறேன். ஓவியங்களுக்கு அடிக்குறிப்பாக சில வரிகள் தரப்பட்டிருக்கின்றன. இந்த ஓவியங்களுக்கே இன்னொரு முறை உயிர்கொடுத்த மாதிரி, அடிக்குறிப்புகளை வழங்கி இருக்கிறார்கள் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் கவிஞர் இன்குலாப்பும்... தமிழினத்தின் பால் அன்பும் பற்றும் கொண்ட, ஆனால், உலகப் பார்வையுடைய ஒரு கலைஞனின் முயற்சி இது என்று சொல்வேன்.

20ஆம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகளுக்குக் காரணமானவர்களை அல்லது பங்களித்தவர்களை இந்த ஓவியங்களாக்கி இருக்கிறேன். சிலர் விடுபட்டுவிட்டார்கள் என்பதை நானும் உணர்கிறேன். பிறரும் உணர்த்தினார்கள். நூற்றாண்டின் தொடக்கத்தில், யுகப் புரட்சிக்குரியவராக விளங்கும் பிரபாகரன் வரை பல போராளிகளை வரிசைப்படுத்தி இருக்கிறேன். குறைவான ஓவியங்களுடன் நிறைவான பார்வையைத் தர வேண்டும். அதுவே ஓவியக் காட்சிக்கு வெற்றி தரும் எனக் கருதினேன்.

*- மலேசிய நண்பன், 23 சூலை 2000*

# ஓவியத்தில் நூற்றாண்டு வரலாறு

## பொன். தனசேகரன்

*மனித சமூக வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு மிகப் பெரிய மாற்றங்களை உள்ளடக்கியது. அரசியல் சமூக, பொருளாதார, அறிவியல், துறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இரு பெரும் உலகப் போர்களையும் ஆதிக்கங்களிலிருந்து விடுபட நடந்த பல்வேறு மக்கள் விடுதலைப் போராட்டங்களையும் கடந்த நூற்றாண்டு கண்டுள்ளது.*

*புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் வாழ்க்கைத் தரத்தையும் மனித குல வரலாற்றையும் மேம்படுத்த உதவியுள்ள அதே நேரத்தில் மக்கள் தொகைப் பெருக்கமும் வறுமையும் இன்னமும் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. காலனி ஆதிக்கம் வேறு வடிவில் அதன் கோர முகங்களைக் காட்டி வளரும் நாடுகளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. மூன்றாம் உலகப் போருக்கு உடனடிச் சாத்தியமில்லை என்றாலும் கூட, உலகெங்கும் ஆங்காங்கே போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. கடந்த நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகள் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளை மீள் பார்வையாகத் தனது ஓவியங்களில் பதிவு செய்துள்ளார் ஓவியக் கலைஞர் புகழேந்தி (34)*

*காந்திஜி, தாகூர், ஐன்ஸ்டீன், லெனின், தெரஸா போன்ற மா மனிதர்கள், உலகப் போரின் அவலங்கள், விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு பரிமாணங்கள் புகழேந்தியின் தூரிகையில் உறங்காத நிறங்களாக வடிவம் கொண்டுள்ளன.*

*'உறங்கா நிறங்கள்' என்ற தலைப்பிலான இவரது ஓவியக் கண்காட்சி சமீபத்தில் சென்னை லலித் கலா அகாதெமியில் நடைபெற்றது. ஓர் நூற்றாண்டு வரலாற்றை 37 ஓவியங்களில் அடைத்து விட முடியாது என்றாலும் மொழி, நாடு, தேசம் ஆகியவற்று டன் அதனையும் கடந்து சர்வதேச அளவில் தேர்ந்தெடுத்த நிகழ்வுகளை ஓவியங்களாக் கியுள்ளார். வண்ணங்கள், வடிவங்கள், குறியீடுகள் மூலம் ஓவியங்களில் பார்வையாளர் மனதில் நேரடியாக இடம் பிடிக்க முயல்கிறார். நேற்றைய வரலாறுகள் இன்றைக்கு உணர்ந்து கொள்ள வேண்டிய படிப்பினைகளாக இந்த ஓவியங்கள் உணர்த்துகின்றன.*

*குடந்தை ஓவியக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியும் புகழேந்தியின் சொந்த ஊர் தஞ்சை மாவட்டம் தும்பத்திக் கோட்டை குடந்தை ஓவியக் கல்லூரியில் பட்டப் படிப்பையும் பின்னர் ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பட்டத்தையும் பெற்றவர். 1987 - ம் ஆண்டில் இளைஞர்களுக்கான தேசிய விருதையும் அதே ஆண்டில் தமிழ்நாடு மாநில விருதையும் பெற்றவர். பல் வேறு நகரங்களில் நடைபெற்ற தேசியக் கண்காட்சிகளில் இவரது ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. பல்வேறு சமூக நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் இவரது எரியும் வண்ணங்கள் என்ற தலைப்பிலான ஓவியப் படைப்புகளைத் தாங்கிய நூல் 1994- ல் வெளிவந்துள்ளது.*

*இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கூர்மையடைந்து இருக்கும் இன விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் தேவையை உணர்த்துவதே இக்கண் காட்சியின் நோக்கம் என்கிறார் புகழேந்தி.*

*மூன்று மாத கால உழைப்பின் பலனாக உருவான இந்த ஓவியங்கள் பார்வையாளர்களின் மனதிலும் உறங்காது நிலைத்து நிற்கும்.*

*- தினமணி கதிர், 20.02.2000*

## உறங்காத நினைவுகளுடன் ஓயாத தூரிகை...

**அ. குமரேசன்**

*சென்னையின் கலைக்கூடங்களில் ஓவியக் கண்காட்சிகள் நடப்பது புதிதல்ல என்ற போதிலும், லலித் கலா அகடமியில் பிப்ரவரி 7 முதல் 12 வரை நடைபெற்ற அந்தக் கண்காட்சி மூன்று அம்சங்களில் புதுமையாக அமைந்திருந்தது. ஒன்று - உறங்கா நிறங்கள் என்ற அதன் தலைப்பும், அதற்கான படைப்புகளும்; இரண்டு - ஓவியங்களில் இருந்த எவரையும் மிரட்சிப்படுத்தாத எளிமை ; மூன்று - கண்காட்சிக்கு வந்த வழக்கத்துக்கு மாறான கூட்டம்.*

*இத்தனைக்கும் ஓவியர் கு.புகழேந்தி மரபு ஓவியங்கள் முதல் நவீன பாணி வரையில் ஓவிய மாணவர்களுக்குக் கற்று தருகிற ஒரு ஆசிரியர். குடந்தை ஓவியக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியும் புகழேந்தி, அதே கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர். ஹைதராபாத் மத்திய பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தமிழகத்திலேயே முதல் முறையாக ஓவியத்துறையில் முதுகலைப்பட்டம் பெற்றவர்.*

*1987ம் ஆண்டு கல்கத்தாவில் இளைஞர்களுக்கான தேசிய ஓவியப்போட்டி நடந்தது. அதில் வெற்றி பெற்ற புகழேந்தியின் படைப்பைத் தேர்வு செய்தவர் எம்.எஃப் உசேன். அதே ஆண்டில் தமிழ் நாடு மாநில விருதும் இந்தியாவின் உலக விமானப் போக்குவரத்துக் குழுமத்தின் விருதும் பெற்ற இவரது ஓவியங்கள் சென்னை, ஹைதராபாத் லக்னோ, டில்லி, பெங்களூர், மும்பை முதலிய நகரங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான பல கண்காட்சிகளில் இடம் பெற்றுள்ளன. இருபதுக்கும் மேற்பட்ட தனிக் கண்காட்சிகளும் நடத்தியுள்ளார்.*

*உறங்கா நிறங்கள் கண்காட்சி, இருபதாம் நூற்றாண்டு மனித சமூக வரலாற்றில் செய்துள்ள மிகப் பெரும் பதிவுகளைத் தூரிகை வாயிலாக நினைவூட்டுகிறது. உறக்கம் வரவிடாத போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரல்கள், சகல அடிமைத் தளைகளையும் அறுத்தெறிந்து அடுத்த கட்ட முன்னேற்றகரமான, வாழ்க்கைக்குப் பாயத் துடிக்கும் விடுதலை வேட்கைகள், தன் நபர்கள் மூலமாக வெளிப்பட்ட மனித நேய இழையோட்டங்கள் இவைதான் கண்காட்சிப் படைப்புகளின் கரு.*

*சாமான்ய மக்களை மருட்டுகிற நவீனக் குழப்பங்கள் இல்லை என்றாலும் கூட, பல ஓவியங்கள் கற்பனைக்கு அதிகம் வேலை வைக்காத உருவப் படங்களாக (போர்ட்ரெய்ட்) இருந்தன. அது ஏன்? இந்த விமர்சனத்தை ஏற்றுக் கொண்ட புகழேந்தி, படைப்பாளி, பார்வையாளர் இருவரது கற்பனைகளும் சந்திப்பதுதான் முழுமை. அது ஒரு முடிவற்ற முழுமையும் கூட. ஆனால் இந்தக் குறிப்பிட்ட தலைப்புக்கான சில ஓவியங்களில் நேரடி உருவப் பதிவு தவிர்க்க முடியாததாகிவிட்டது. என்றார்.*

*எளிமையான வடிவத்திலேயே புதுமைகளைப் படைக்க முடியும் என மெய்ப்பிப்பதாகவும் ஓவியங்கள் உள்ளன. இன்றைய நவீன ஓவியச் சந்தையில் இத்தகைய, ஒரு சமுதாயச் செய்தியுடன் கூடிய எளிய படைப்புகள் வரவேற்கப்படுமா?*

*விற்பனை நோக்கம் எனக்கில்லை. யாரேனும் விரும்பிக் கேட்டால் தருவதற்குத் தயக்கமும் இல்லை. சொல்லப் போனால் கண்காட்சியைப் பார்த்த சிலர் குறிப்பிட்ட சில ஓவியங்கள் தங்களுக்குத் தேவை என கேட்டுள்ளனர். என்னுடைய நோக்கம், இந்தச் செய்தியும் கலையும் பரவலாக மக்கள் பார்வைக்குச் செல்ல வேண்டும் என்பதுதான். அதற்கு இந்த வடிவம்தான் ஏற்றது என்று நான் நம்புகிறேன். என்றார் ஓவியர்.*

விற்பனை நோக்கம் இல்லை என்கிற போது மாத ஊதியத்தில் கணிசமான பகுதி ஓவியத் தயாரிப்புக்கே செலவிடப்படுவது தவிர்க்க முடியாததாகவிடுமே? ஆம். ஆயினும் குடும்பத்தினர் தனது முயற்சிக்கு முழு ஊக்கமும் ஒத்துழைப்பும் அளித்து வருவதாகத் தெரிவித்தார்.

லெனின், காந்தி, நெல்சன் மண்டேலா, விஞ்ஞானி ஐன்ஸ்டீன் இலக்கியவாதிகள் மார்க்சிம் கார்க்கி, பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன், நிலவில் கால் பதித்த ஆர்ம்ஸ்ட்ராங், மனித நேய சேவைக்கு அன்னை தெரசா என பல கோணங்களில் இவரது தூரிகை வரலாற்றுப் பதிவுகளைச் செய்துள்ளது. நிகழ்காலத்தையும் தொட்டுள்ள தூரிகை எல்டிடிஈ தலைவர் பிரபாகரனைக் கூட வரைந்திருக்கிறது. ஆனால், இந்தியாவின் இன்றைய அச்சுறுத்தலாக எழுந்துள்ள மதவெறி பூதம் பற்றி ஏனோ கண்டுகொள்ளவில்லை. இதைச் சுட்டிக் காட்டியபோது, “உண்மைதான் அடுத்த கட்டமாக இக் கண்காட்சியை வெளியே கொண்டு செல்கையில் அதையும் சேர்க்க முயல்வேன்,” என்றார்.

இக்கண்காட்சிக்கான ஓவியப் பணிகளைத் துவங்கி மூன்று மாதங்களில் முடித்துள்ளார். கான்வாஸ் திரையில் எண்ணெய் வண்ணம் என்ற வழக்கமான உத்தியையே பயன்படுத்தியிருப்பினும் அதனைக் கையாண்டவிதத்தில் ( டிரீட்மென்ட்) தனக்கென ஒரு பாணியைப் பின்பற்றியுள்ளதாகக் கூறினார்.

ஏற்கனவே இவரது ‘எரியும் வண்ணங்கள்’ என்ற கண்காட்சி திருவண்ணாமலையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க உதவியுடன் நடத்தப்பட்டுள்ளது. அந்த ஓவியங்களைத் தொகுத்து ஒரு ஓவிய நூலாகவும் வெளிவந்துள்ளது.

‘உறங்கா நிறங்கள் ’ கண்காட்சியில் சிந்தனைக்கும் ரசனைக்கும் ஈர்ப்பாக அமைந்த மற்றொரு முக்கியமான அம்சம் ஒவ்வொரு ஓவியத்தின் அருகிலும் ஒட்டப் பட்டிருந்த கவிதை வரிகள். ஓவியரின் தூரிகையும் கவிஞரின் பேனாவும் அங்கே கை கோர்த்திருந்தது ஒரு தனி அனுபவம். கவிஞர்கள் இன்குலாப், காசி ஆனந்தன் ஆகியோர் அந்தக் கவிதை வரிகளைப் படைத்தளித்தனர்.

“இன்னும் இதுபோல் நிறைய விஷயங்களை வண்ணங்களில் வெளிப்படுத்த வேண்டும். தொடர்ந்து செயல்பட வேண்டும்” என்பதே தனது எதிர்காலத் திட்டம் எனக் கூறினார் அந்தத் திட்டம் நிறைவேற தமுஎச போன்ற மக்கள் கலைக்கான அமைப்புகளின் தேவை அவர்களின் தமது பகுதிகளில் நடைபாதைகளில் கூட, இக்கண்காட்சியை நடத்த முன்வந்தால் படைப்புகளை வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

*- வண்ணக்கதிர், 20.02.2000*



# எண்ணத்தின் வண்ணங்கள்

***கணபதி கணேசன்***

*ஓவியர் புகழேந்தி தூரிகையைத் துப்பாக்கியாக்கியவர். மனித இதயங்களில் வண்ணங்களாய் நுழைபவர். கடந்த நூற்றாண்டு வரலாற்றை ஓவியமாக்கிக் கண்காட்சி வழி உலக மக்களுக்கு எடுத்துச் சொல்ல எண்ணங் கொண்டுள்ளவர். அவரது உறங்கா நிறங்கள் ஓவியக் கண்காட்சி தமிழகத்தைத் தாண்டி முதல் தடவையாகக் கோலாலம்பூரில் சென்ட்ரல் மார்க்கெட் வளாகத்தில் ஜூலை மாதம் 17 முதல் 21 வரை செம்பருத்தியின் ஏற்பாட்டில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள மலையகம் வந்திருந்த ஓவியர் புகழேந்தியைச் சந்தித்தோம். அவரது கருத்தின் வண்ணச் சிதறல்கள் இவை.*

■ ***ஓவியத்திற்கும் சமூகத்திற்குமான உறவுகள் எப்படி இருக்கின்றது? சமூகம் ஓவியங்களை எப்படிப் புரிந்து கொள்கின்றது?***

இன்றைய கலை இலக்கியச் சூழலில் சமூகம் - ஓவியம் என்று எடுத்துக் கொண்டால் இரண்டும் ஒன்றோடு ஒன்று இணையவில்லை. அப்படித்தான் நான் நினைக்கிறேன். அதற்குக் காரணம் சமூகப் பார்வைகொண்ட ஓவியர்கள் மிகக் குறைவானவர்களே சமூகத்தில் இருக்கிறார்கள். மக்களுடன் தொடர்புகொண்டு மக்களின் பிரச்சினைகளை ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்தும் பண்பு குறைந்து கொண்டு வருகின்றது. எந்த இலக்கிய வடிவமாக இருந்தாலும் மக்களுக்கும் கலைகளுக்குமான பிணைப்பு நெருக்கமாக இருக்க வேண்டும். அந்த நெருக்கம் நேற்று இருந்ததைவிட இன்று அதிகமாக இருக்கிறது. ஆனாலும் இன்னும் அந்த இலக்கை அது அடையவில்லை. தனது கலைப்படைப்புக்களை விற்பனைசெய்யும் சந்தையாக மக்களைப் பார்க்கிற பண்பு இவர்களுக்கு இருக்கின்றது. ஆனால் படைப்பு புரியாவிட்டால் மக்களுக்கு கலை மீதான ஞானம் குறைவாக இருக்கிறது என்று சொல்கிற கருத்தும் கவனிக்கத்தக்கது. என்னைப் போன்றவர்களுக்கு இந்தப் போக்கை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

■ ***கடந்த நூற்றாண்டின் போராட்ட வாழ்வை மட்டும் படம் பிடிக்கின்ற போக்கு உங்களுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று? காரணம் என்ன?***

நான் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு விவசாயின் மகன். நானும் வயல், சார்ந்த மக்கள் பறவைகள், விலங்குகள், இயற்கைக் காட்சிகள் என்று ரசித்துக் கொண்டு அவர்களின் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தவன்தான். ஆனால் முதன் முதலாக நான் ஓவியனாக அடையாளம் காணப்பட்டபோது அந்த உழைக்கும் பெண்கள், பயிர்கள், மரங்கள் என்பனவெல்லாம் என்னைப் பாதித்தன. உழைப்பாளிகளின் உடலசைவுகளை விடவும் மரங்கள், பயிர்கள் என் உணர்வுகளைக் கிளறிவிடவில்லை. உழைப்புதான் கூலிதரும் என்கிற போதிலும் உழைப்பின் பயனாகவே உணவு கிடைக்கும் என்ற போதிலும் அந்த வயதில் மனிதனின் உழைப்புத் தருகின்ற வேதனை உழைக்கும் மக்கள் மூட்டைகளைத் தனியாகச் சுமக்கின்றானே - என்கிற சிந்தனை என்னை வாட்டியது உண்மை.

நான் கல்லூரியில் 1983ல் சேர்ந்தபோது தான் இலங்கையில் மிகக் கொடுமையான படுகொலைகள் நடைபெற்றன. அது தமிழகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தை விடவும் உணர்வுபூர்வமாய் அப்போது தமிழீழ மக்களுக்காகக் குரல் கொடுக்கும் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்தத் தருணத்தில்தான் நான் கல்லூரிக்குள் நுழைந்தேன். அதற்கு முன்னாலும் இந்த இனப் படுகொலைகளை எதிர்த்து ஓவியங்கள் செய்வது - பேசுவது

என்று இருந்த நான் இந்த மாணவர் போராட்டத்தில் என்னை முழுமையாக இணைத்துக் கொண்டேன்.

கல்லூரியில் சேர்ந்து பட்டம் வாங்கி ஒரு வேலையில் சேர்ந்து சம்பளம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நானும் கல்லூரிக்குள் நுழைந்தேன். எதிர்காலத்தைப் பற்றிய கேள்விகள் என் தந்தைக்கு இருந்தது. எனக்குள் கனவுகள் இருந்தன. எனக்குப் பிடித்தது ஓவியம்தான் என்ற முடிவுக்கு வந்துதான் நான் ஓவியத்தைத் தேர்ந்தெடுத்தேன்.

மத ஒடுக்குமுறை, ஜாதீய ஒடுக்கு முறைகளுக்கு எதிரான ஒரு நிலையை நான் எடுப்பதற்கு இந்த ஈழப் போராட்டமே எனக்குக் கற்றுத் தந்தது. போராட்டங்களுக்கான உணர்வை வழங்கும் போக்கு அதனால்தான் ஏற்பட்டது என்று எண்ணுகிறேன்.

■ **வண்ணங்களுக்குச் சில மருத்துவக் குணங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

சில வண்ணங்களைப் பார்த்தால் நமக்குக் கண்ணை உறுத்தும். அது இயற்கையாகவே உள்ளது. ஆனால் பசுமையான புல்வெளியையும் பயிர்களையும் பார்க்கும்போது அது மனதுக்குத் தெம்பையும் மகிழ்ச்சியையும் வழங்குகின்றது. நம் கண்ணால் எதைப் பார்க்கிறோமோ நாம் அதுவாகவே ஆகிவிடுகிறோம். நாம் நீர் வீழ்ச்சியைப் பார்க்கும்போது அல்லது பாலைவனத்தில் போய்க் கொண்டிருக்கும்போது மண்பரப்பின்மீது மஞ்சள் வெயில் பட்டுத் தெறித்திருப்பதைப் பார்க்கும்போது வரும் வண்ணத்தை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் அது உண்மை நமக்கு ஏற்றுக் கொள்ளவும் நம்ப முடியாமலும் போகலாம். ஆனால் அதுதான் உண்மை. வண்ணங்கள் மனநிலை சார்ந்துதான் வெளிப்படுகின்றன. அதுதான் ஓவியத்திலும் வெளிப்படுகின்றது படுக்கை அறைகளில் வெளிர்நீலம் வரவேற்பு அறையில் வேறு வர்ணம். அது இயற்கையான வண்ணங்கள்தான். படுக்கை அறையில் குளிர்ச்சியும், வரவேற்பு அறையில் பார்ப்பவர்களைச் சாந்தப்படுத்தக் கூடிய வண்ணமுமே பயன்படுத்தப்படுகின்றன. அவை மருத்துவ ரீதியில் குணமளிக்கக்கூடியனவா என்பது பற்றிச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவை இயற்கையானவை என்பதே உண்மை.

■ **நீங்கள் உங்கள் ஓவியங்களில் வண்ணங்களை எப்படிக் கையாள்கின்றீர்கள் ?**

வண்ணங்களை நான் என்னுடைய மண்ணில் இருந்துதான் தேர்ந்தெடுக்கின்றேன். மண் என்பது நம் சொந்த நிறம். நம் மண்ணுக்கென்று ஒரு நிறம் இருக்கின்றது. பழுப்பு நிறம், நாம் எந்தச் சூழலில் வாழ்கின்றோமோ அந்தச் சூழலில் இருந்துதான் நான் ஓவியங்களுக்கான வண்ணங்களையும் தேர்ந்தெடுக்கின்றேன். ஒரு தமிழனை வரையும்போது வெள்ளைக்காரனின் உடல் அமைப்பையோ நிறத்தையோ கொண்டு வர முடியாது. அப்படிச் செய்தால் அது உண்மையாக இருக்காது. நகர வாழ்க்கை எப்படி வாழ்க்கையை அழித்ததோ அதேபோல் நிறத்தையும் மனத்தையும் ஏன் எல்லாவற்றையுமே அழித்து விட்டது. மழை பெய்கின்றபோது மண்வாசனை என்கிறோம். ஆனால் நகர வாழ்வில் அது சாத்தியம் இல்லாது போயிற்று நிறம் என்பது பூமியில் இருந்துதான் கிடைக்கின்றது. அதனால் மண்சார்ந்த வண்ணங்களைத்தான் இன்னும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.

■ **நவீன ஓவியங்களுக்கும் தங்கள் ஓவியங்களுக்கும் எத்தகைய வித்தியாசங்கள் இருக்கின்றன?**

உள்ளதை உள்ளபடி சொல்லுதல் என்பது ஒன்று. உள்ளத்தை - மனதை சொல்லுதல் மற்றொன்று. என்னைப் பொறுத்தவரையில் நான் இரண்டையும் கடைப்பிடிக்கிறேன். படைப்பைச் செய்தபிறகு அதை ஒருவன் புரிந்து கொள்ள வேண்டும் என்று

விரும்புகின்றேன். நான் பிற ஓவியங்களில் இருந்து எப்படி வேறுபடுகின்றேன் என்றால் எனது ஓவியங்களின் உள்ளடக்கத்தை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். நவீனத்துவம் எந்த விதத்திலும் பார்வையாளனை மிரட்டிவிடக் கூடாது என்கிற கருத்தும் எனக்கு இருக்கிறது.

■ ***கலைகளின் மூத்த கலையாக ஓவியம் கருதப்படுகிறது. அதாவது கதை, கவிதை, பாடல்களுக்கு முன்பே ஓவியம் தோன்றிவிட்டது. ஆனால் மற்ற வகை இலக்கியங்களை ரசிப்பது போல் தற்போது ஓவியத்தை ரசிக்கும் நிலை இன்று இல்லை. இதற்கு காரணம் என்ன?***

இன்று இலக்கியத்தில் பல இஸங்கள் தோன்றியுள்ளன. இந்த இஸங்களுக்கு எல்லாம் மூலக் காரணம் எதுவென்றால் இந்த ஓவியம்தான். ஓவியமும் சிற்பமும் இன்று நம் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் காலத்தால் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

முன்பெல்லாம் எழுத்து வடிவம் கிடையாது. எல்லாம் ஓவியமாகத்தான் இருந்தன. வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் ஓவியத்தைத்தான் பேசுவதற்குக் கூடப் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஓவியம் ஒரு மொழியாகவே அன்று விளங்கி இருக்கின்றது. காட்டு வாசிகளாக அவர்கள் வாழ்ந்தபோது பேச்சு மொழி இல்லாதபோது விலங்குகளை ஓவியங்களாகப் படைத்துப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான விஷயங்களை ஓவியங்களைப் பேசாமல் போனதால் மக்களுக்கும் ஓவியத்துக்குமான இடைவெளி நீண்டு விட்டது. எந்தக் கலை வடிவத்திலும் மக்கள் தமது வரலாறு வாழ்க்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்றுதான் பார்ப்பார்கள். ஓவியங்கள் இன்று சமுதாய வெளிப்பாடுகளாக இல்லாமல் தனிமனித வெளிப்பாடு களாகத்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றன. உலக அளவிலேயே இது நடந்து கொண்டுள்ளது. இன்றுள்ள மக்கள் வாழ்வியலை நாளைய வரலாற்றுக்குச் சொல்லக் கூடிய மிகப்பெரிய கலை வடிவம் ஓவியமாகத்தான் இருக்க முடியும்.

■ ***இவ்வளவு உன்னதமான கலைவடிவம் இன்று பத்திரிகை சஞ்சிகைகளில் கதை, கட்டுரை கவிதை, நாவல்களுக்கான காட்சி விளக்கப்படங்களாக மாறிவிட்ட நிகழ்வு குறித்து என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்? இதற்கு வணிக இதழ்கள்தான் காரணமா? அல்லது ஓவியர்களே இதற்குக் காரணமாக ஆகிவிடுகிறார்களா?***

நான் இதழ்களை மட்டுமே குறை சொல்ல மாட்டேன். இரண்டுமே உண்டு. ‘உறங்கா நிறங்கள்’ கண்காட்சி பற்றி தமிழகத்தில் 40 இதழ்கள் எழுதியிருக்கின்றன. இது ஒன்றும் சாதாரணமானதல்ல. நானே இதழ்களை விமர்சனம் செய்கிறவன். குறை சொல்கிறவன். கடந்த 10 ஆண்டுகளாக எனக்கொரு குறை உண்டு. ஊடகங்கள் இந்தக் கலை வடிவத்தைச் சரியாகக் கையாள்வதில்லை. அதற்கு எதிர்மறையாகப் பத்திரிகையாளர்கள் கேட்பார்கள் “அவர்கள் எதைப் பற்றிச் சொல்கிறார்கள். நாம் அவர்களைப் பாராட்ட!” என்கிறார்கள். இன்று கலையை வளர்க்கக்கூடிய நிலையில் பத்திரிகை உட்பட எல்லா ஊடகங்களும் வளர்ந்திருக்கின்றன.

சென்னையில் நடக்கின்ற ஒரு விஷயம் அடுத்த சில வினாடிகளில் உலகம் முழுவதும் பரவிவிடக்கூடிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அப்படி வாழ்ந்திருக்கிற போதும் இந்தத் தகவல் ஊடகங்கள் அதிகமாக ஓவியத்துக்கு மதிப்புத் தருவதில்லை. ஒரு கவிதைக்கு வழங்குவது போல, சிறுகதைக்கு வழங்குவது போல, ஓவியத்துக்கு வழங்கப்படவில்லை என்பது உண்மைதான். இதற்குக் காரணம் ஓவியர்கள்தான். பரந்த உலகப் பார்வை ஓவியர்களுக்கு வரவேண்டும். அது மட்டும் இருந்துவிட்டால் ஓவியத்தைப் பல நிலைகளுக்கும் எடுத்துச் சொல்லக் கூடிய நிலைக்கு நாம் வந்து விடலாம்.

■ **தமிழீழ விடுதலைப் போராட்டம் உங்களை அதிகம் பாதித்திருப்பது உங்கள் படங்களில் இருந்து உணர முடிகிறது. ஆனால் தமிழீழ அகதிகள் குறித்த உங்கள் பார்வை என்ன?**

இந்தப் போராட்டக் களத்தின் போராளிகளையும் போராட்டத்தையும் பார்த்து நான் எவ்வளவு தூரம் வேதனையும், மகிழ்ச்சியும் அடைந்தேனோ அதைவிட அதிகமாக நான் தமிழீழ அகதிகளை நினைத்து வேதனை அடைந்திருக்கின்றேன். பல நாடுகளில் இருந்து இங்கு வருகை தருகின்ற அகதிகளிடம் நான் பேசியிருக்கின்றேன். இவர்களுடன் எனக்கு 15 ஆண்டுகளாகப் பழக்கம் உண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சொந்த மண்ணை இழந்து, இரவல் மண்ணில் எதை நோக்கிய பயணம் என்பது கூடப் புரியாமல் இன்று இந்தத் தமிழர்கள் உலகம் பூராவும் பரவி இறைந்து கிடக்கின்றார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். திசையறியா மனநிலையில் கூட பயணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

இன்று பல நாடுகளில் அவர்களில் சிலர் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிற போதிலும், என்றுநாம் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழப் போகிறோம் என்ற நினைப்புடனே அவர்கள் உலகம் பூராவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சொத்து சுகங்களை இழந்து சுயமரியாதையை இழந்து அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஈழமண்ணில் என்று வாழ்வோம் என்கிற ஏக்கம் எல்லோர் மனதிலும் இருக்கிறது. இவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை சிதைக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் கேள்விகுறியாக்கப்பட்டு அவர்களின் குழந்தைகளைப் பிரிந்து மனைவி - கணவன் பிரிந்து ஒவ்வொருவரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அப்படியொரு நிலை எனக்கு ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்று எண்ணிக் கண்ணீர் வடித்திருக்கின்றேன். ஒன்றிரண்டு நாள் எனது குடும்பத்தைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை. ஆண்டுக் கணக்கில் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்பது கூடத் தெரியாமல் பிரிந்து வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளவு சோகமானது?

■ **உங்கள் மீது வைக்கப்படும் விமர்சனங்களை நீங்கள் எப்படி எதிர்நோக்குகின்றீர்கள்?**

விமர்சனங்கள் கண்டிப்பாய் என்னை வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். என்மீது பல விமர்சனங்கள் உண்டு. அரசியல் பேசுகிறேன் என்கிறார்கள். வேண்டுமென்று பொறாமையினால் சொல்லப்படும் விமர்சனங்களை நான் ஒதுக்கி விடுவேன். எனக்குத் தெரியும் எது உண்மையான விமர்சனம் என்று! விமர்சனத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய பக்குவம் எனக்கு உண்டு. அதே நேரத்தில் சில விமர்சனங்கள் உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால் என்னுடைய நோக்கம் என்னவோ அதற்காகத்தான் நான் இருப்பேன். என்னுடைய நோக்கம் எது சம்பந்தப்பட்டதாக இருக்கின்றதோ அதற்காகத்தான் நான் முன்னிற்பேன். அதுதான் என் மீதே நான் வைத்திருக்கும் விமர்சனம்.

*- செம்பருத்தி, ஆகஸ்ட் 2000*



## “கலை சமூகத்துக்காகத்தான்” – புகழேந்தி

### புனிதன்

ஓவியர் புகழேந்தி, போராட்டம் பற்றிய “ ஓவியங்களை வரையவில்லை; இவரது ஓவியங்களே போராடுகின்றன” என்று கவிஞர் காசி ஆனந்தன் பாராட்டியதைத் தவிர, புகழேந்தி பற்றி நாம் வேறொன்றும் சொல்லத் தேவையில்லை. அண்மையில் மலேசியா, சிங்கப்பூர் சென்று ஓவியக் கண்காட்சியை சிறப்புற நடத்தி விட்டு வந்த ஓவியர் ‘தலித் முரசு’க்கு அளித்த பேட்டி.

■ **உங்களுடைய ஓவியக் கண்காட்சியை மலேசியாவில் நடத்த வேண்டிய அவசியம் என்ன?**

தமிழகத்தில் என்னுடைய கண்காட்சி நடைபெற்றபோது பார்த்த தமிழ் ஆர்வலர்கள், நண்பர்கள் மற்றும் பல்வேறு இயக்கங்களில் இருக்கக்கூடிய தோழர்கள், ‘இக்கண்காட்சி இந்தியாவைக் கடந்து உலகிலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் போக வேண்டும்’ என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் மலேசியாவில் இருந்து வெளிவரும் ‘செம்பருத்தி ’ என்ற இதழின் அழைப்பும், எழுத்தாளர் சை.பீர் முகமது அவர்களின் முன்னேற்பாடும் நான் அங்கு கண்காட்சி நடத்த மிகவும் துணைபுரிந்தது. இந்த அடிப்படையில் அமைந்ததுதான் வெளிநாட்டில் நடைபெற்ற என்னுடைய முதல் ஓவியக் கண்காட்சி.

■ **இதற்கு அங்கு வரவேற்பு எப்படி இருந்தது?**

இக்கண்காட்சி மிகப்பெரிய வெற்றியை ஈட்டித் தந்தது என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக, மலேசியாவில் இருந்து வெளிவரும் அனைத்து இதழ்களிலும் கண்காட்சி குறித்த விரிவான செய்தி விமர்சனங்களும், ஓவியங்களின் புகைப்படங்களும் வெளிவந்திருந்தன. இங்கு பல இன மக்கள் வாழக்கூடிய ஒரு சூழலில், இக்கண்காட்சி மிகுந்த வரவேற்பைப் பெற்றது என்பது ஒரு குறிப்பிடத்தகுந்த செய்தியாக நான் கருதுகிறேன். மொத்தத்தில் இக்கண்காட்சியை பதினைந்தாயிரம் பேர் பார்த்திருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

■ **அங்குள்ள தமிழர்களின் நிலை எவ்வாறு இருக்கிறது?**

அங்குள்ள தமிழர்கள் பொதுவாக மேம்போக்கான பார்வை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இன்றைக்குப் பல இன மக்களோடு சேர்ந்து வாழ்கின்றபோது, நம்முடைய இன அடையாளங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், இழந்துபோன அடையாளங்களை மீட்டெடுப்பதற்கும் - நாம் பிற இன மக்களுடைய வளர்ச்சியைப் பார்த்து ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்காமல், நம்மையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

■ **‘கலை கலைக்காகவே ’ என்று சொல்லப்படுகிறது. உங்கள் பார்வை என்ன?**

கலை என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாக, சமூக அவலங்களை வெளிப்படுத்துவதன் மூலம் - மக்களிடையே ஒரு விழிப்புணர்வையும் போராட்ட உணர்வையும் தூண்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒரு கவிதை, சிறுகதை, இலக்கியம் போன்றவை எப்படி சமூக மாற்றத்திற்காகப் பயன்படுகிறதோ - அதே போல ஓவியமும் இதைச் செய்ய முடியும் என்ற ஆழமான நம்பிக்கை எனக்குண்டு. எனவே, ‘கலை கலைக்காக’ என்பதை என்னால் ஏற்க இயலவில்லை. கலை சமூகத்திற் காகத்தான்.

■ **தலித்கலை, இலக்கியம் என்ற வகையில் தலித் ஓவியமும் பரிணாமம் பெற்று வருகிறது. இது குறித்த தங்களின் கருத்து?**

ஒரு போராட்ட உணர்வை அதை உணர்ந்தவன் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆனால், பிறப்பால் மட்டுமே தலித்தாக இருக்கிறவர்கள் தலித்திய சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார்களா? என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு தலித் ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. இந்த ஓவியக் கண்காட்சியில் பிறப்பால் மட்டுமே தலித்தாக இருந்த பல ஓவியர்கள், தலித்தியக் கருத்துகளை வெளிப்படுத்தவில்லை. பிறப்பால் ஒரு தலித் வரையும் எல்லா ஓவியத்தையும் நான் தலித் ஓவியமாகக் கருதவில்லை. எனக்கு அதில் உடன்பாடில்லை. சுண்டூர் சென்றிருந் தேன். அங்கே பாதிக்கப்பட்ட குடும்பங்களின் துயர நிகழ்ச்சிகளில் நான் பங்கெடுத்துக் கொண்டு - அந்த உணர்வோடு வெளியே வந்தேன். இது, மிகப்பெரிய அளவில் வர வேற்பைப் பெற்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய மனதில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் என்னை செய்யத் தூண்டியது.

இந்தப் பிரச்சினைகளை ஒரு தலித்தாக இருந்து வெளிப்படுத்தும்போது - இன்னும் கூடுதல் வீச்சு இருக்கும் என்பதை நான் மறுக்கவே இல்லை. ஆனால், பிறப்பால் மட்டுமே தலித்தாக இருந்து கொண்டு சிந்தனை வேறு மாதிரி இருந்தால், அதை எப்படி தலித் ஓவியமாக ஒப்புக்கொள்ள முடியும்.

■ **காவிரிப் பிரச்சினையை முன்வைத்து சாலையில் அமர்ந்து தாங்கள் ஓவியம் வரைந்ததாக முன்பு செய்தி வெளிவந்தது. அதைப்பற்றி சொல்லுங்கள்.**

1991 ஆம் ஆண்டு காவிரி பற்றிய இடைக்கால தீர்ப்பு வந்தது. அப்போது கர்நாடகத்தில் தமிழர்களை எதிர்த்து வன்முறைகள் நிகழ்த்தப்பட்டன. இதில் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். இந்தியா ஒரு தேசம் என்று சொல்லப்படுகிற நேரத்தில், தமிழர்கள் அகதிகளாக தமிழகம் நோக்கி வந்து கொண்டிருந்த நிலையில், இங்கு பேசப்படுகின்ற தேசியத்திற்கு முரணான விஷயமாக நான் இதைப் பார்த்தேன்.

ஒரு கலைஞன் என்ற அடிப்படையில், தஞ்சை பெரிய கோயில் அருகில் நான்கு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமர்ந்து பல்வேறு ஓவியக் கல்லூரி மாணவர்களையும் ஒருங்கிணைத்து, இந்தப் பிரச்சினையை முன்வைத்து மிகப் பெரும் ஓவியம் ஒன்றை வரைந்தேன். 'வன்முறையை இயக்குதல்' என்று அதற்குப் பெயரிட்டிருந்தேன். நான் செய்ததிலேயே மிகப் பெரிய ஓவியம் இது.

■ **அதேபோல, சாதி மோதல்களைத் தடுப்பதிலும் கலைஞர்களுக்குப் பங்குள்ளதல்லவா?**

சாதி, மத இனக் கலவரங்களை எதிர்த்து நிறைய ஓவியம் செய்திருக்கிறேன். சாதிக்கு எதிராக நடக்கக்கூடிய அத்தனைப் போராட்டத்துக்கும் என்னுடைய குரல் - ஆந்திரா முதல் தமிழ்நாடு வரை ஓவிய வடிவில் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது. தமிழகத்தில் சாதிக் கலவரங்களைப் பற்றிப் பேசும்போது, கீழ்வெண்மணியை ஒதுக்கிவிட்டு யாரும் பேசிவிட முடியாது. எனவே, இந்த நூற்றாண்டு ஓவியத்தில் மிகவும் முக்கியமான ஒரு பதிவாக கீழ் வெண்மணி சாதி வன்முறையை நான் பதிவு செய்திருக்கிறேன். அதேபோல, சுண்டூர் படுகொலை முதல் பத்மினி மீதான பாலியல் வன்கொடுமை வரை நான் பதிவு செய்திருக்கிறேன். எந்த வகையான ஒடுக்குமுறையாக இருந்தாலும் சரி, அதை எதிர்த்து என்னுடைய தூரிகையும் என்னுடைய குரலும் கண்டிப்பாக ஒலிக்கும்.

■ **கற்சிற்பங்கள் முதல் இன்றைய ஓவியங்கள் வரை பெண்ணை நிர்வாணமாக வரையக் கூடிய ஒரு தன்மை உள்ளது. இதற்கு என்ன காரணம்?**

பெரும்பான்மையான கலைஞர்கள் ஆண்களாக இருந்திருக்கிறார்கள் என்பதும் இதற்கு ஒரு காரணம், இன்றைக்கு காலம் மாறிவிட்டது. பெண் ஓவியர்கள் மிக மிகக் குறைவு. மேலை நாடுகளில் Nude study என்பது உண்டு. இதில் ஆண், பெண் என்ற வேறு பாடெல்லாம் இல்லை. ஆனால், இந்தியாவில் மட்டும்தான் ஆணாதிக்கத்தின் வெளிப் பாடாக - பெண்கள் நிர்வாணமாக வரையப்படுகிறார்கள். என்னுடைய ஓவியங்களில் இது போன்று இருக்காது.

■ **இனிவரும் கணினி யுகத்தில் ஓவியத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

கணினியில் சிலவற்றை செய்வதற்குக் கூட கையில் வரைந்துதான் உள்ளே கொண்டு செல்ல முடியும். கணினி சில வேலைகளை எளிமைப்படுத்தி இருக்கிறது. எவ்வளவுதான் கணினிகள் பெருகினாலும் , கையால் வரையப்படும் ஓவியங்களுக்கான மதிப்பை ஒரு போதும் குறைத்துவிட முடியாது. அது நேரத்தைக் குறைத்திருக்கிறது என்று மட்டும் சொல்லலாம்.

*- தலித் முரசு, செப்டம்பர் 2000*



# ‘அழகியலைவிட அவலங்களை வரையவே விரும்புகிறேன்’

*ஓவியர் புகழேந்தியுடன் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் கலந்துரையாடல்.*

**-அப்பாவிச் சோழன்**

*தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சிகள் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் நடந்தன. ஜூலை 10 முதல் ஆகஸ்ட் 11 வரை நடந்த இக்கண்காட்சிகளை 12,000 க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்.*

*மலேசியாவிலிருந்து வெளியாகும் ‘செம்பருத்தி’ இதழும் எழுத்தாளர்கள் பீர்முகமது, உத்திரபாரதி, பாஸ்கர் ஆர்ட்ஸ் அகாடமி, முயற்சியில் இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.‘உறங்கா நிறங்கள்’ என்ற தலைப்பில் புகழேந்தி தனது ஓவியங்களை அமைத்துள்ளார். 20 ஆம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகளை ‘ உறங்கா நிறங்கள்’ என்ற தலைப்பில் ஓவியங்களாக்கியிருக்கிறார்.*

*பிரபல தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி பாஸ்கர்ஸ் அகாடமியில் கடந்த 5, 6.08.00 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. உறங்கா நிறங்கள் என்ற தலைப்பை மையமாக வைத்து நடைபெற்ற இந்தக் கண்காட்சி பார்த்தவர்களது மனதில் ஓயாத சிந்தனை அலைகளை ஏற்படுத்தியது.இவரது ஓவியங்களுக்கு கவிஞர் இன்குலாப், காசி ஆனந்தன் போன்றவர்கள் கவிதைகள் மூலம் வார்த்தை வடிவமும் கொடுத்திருக்கிறார்கள்.*

***அன்னை தெரசா :***

*தாய்மை என்பது*
*கருப்பையில் அல்ல*

***பஞ்சம் :***

*ஒரு துளிப் பாலுமின்றி*
*ஒட்டிய மார்பு*
*இது சோமாலியாவின்*
*தேசப்படம்*

*போன்ற கவிதைகள் இருபதாம் நூற்றாண்டின் பதிவுகளான இந்த ஓவியத் தொகுப்பிற்கு வலுச் சேர்க்கின்றன.*

*ஓவியத்தில் முதுகலைப்பட்டம் பெற்று குடந்தை ஓவியக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் 32 வயது இளைஞரான புகழேந்தியின் தூரிகைக்குச் சக மனிதனின் சுமைகளைப் பகிர்ந்து கொள்ளும் ஆசையே அதிகமாக இருக்கிறது.*

*1994ம் ஆண்டு வெளியான ‘எரியும் வண்ணங்கள்’ என்ற ஓவியத் தொகுப்பின் மூலம் இந்தியாவின் பரவலான பார்வையைப் பெற்று, தமிழகத்தின் சகல ஊடகங்களாலும் புகழப்பட்டாலும் இவரது ஓவியங்களைப் போலவே இவரும் எளிமையாகவும், இனிமையாகவும் இருக்கிறார்.*

*பாஸ்கர்ஸ் அகாடமியில் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் அமலதாசனின் தலைமையில் ஓவியர் புகழேந்தியோடு ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. அதிலிருந்து சில பகுதிகள்...*

*ஓவிய ஆர்வலர்கள் அவரிடம் பல்வேறு வினாக்களை வீசினார்கள். புகழேந்தியின் பதில்கள் கவிநயத்தோடு வெடித்து விழுந்தது.*

■ ***இயற்கையை, அழகை வரையாமல் பிரச்சனைகளை நீங்கள் வரையக் காரணம்...?***

***-பிச்சினிக்காடு இளங்கோ***

*உலகத்தின் பிரச்சனைகள், சகமனிதனின் பிரச்சனைகள் என்னைப் பாதித்தன. அதை*

இந்த ஓவியங்கள் வெளிப்படுத்துகின்றன. இங்கு சோமாலியா, ஹிரோஷிமா, ஆம்ஸ்ட்ராங், அன்னை தெரேசா, மகாத்மாகாந்தி எனப் பல ஓவியங்கள் இருக்கிறது. ஒவ்வொன்றிலும் பல செய்திகளைச் சொல்லியிருக்கிறேன். உதாரணமாக சோமாலியா, ஹிரோஷிமா போன்ற ஓவியங்களில் அந்தச் சோகங்களை உரித்தெடுத்திருக்கிறேன். நடப்பதே காந்தியின் வாழ்க்கையாக இருந்ததை அவரது ஓவியம் சுட்டுகிறது. ஓவியங்கள் பூடகமாக இருக்கலாம், புரியாமல் இருக்கக்கூடாது. பார்ப்பவரை பல கோணங்களில் யோசிக்க வைப்பதே ஓவியங்களின் வேலை. எப்படி ஒரு நல்ல கவிதை படிப்பவர்களை யோசிக்க வைக்கிற புதிய தளத்திற்கு இட்டுச் செல்கிறதோ, அதே வேலையை எனது ஓவியம் செய்ய வேண்டும். என்று ஆசைப்படுகிறேன்.

■ ***ஓவிய வாழ்க்கை லாபகரமாக இருக்கிறதா? -கவிஞர் இக்பால்***

பொருளாதார லாபங்களை நான் பொருட்படுத்தவில்லை. என்னுடைய ஓவியங்கள் சரியாக புரிந்து கொள்ளப்பட்டால் லாபம். இன்று உலகம் முழுவதும் இந்த ஓவியங்கள் பார்க்கப்படுகிறதே அது லாபம்.

■ **இந்த ஓவியங்கள் வெளிப்படுத்தும் துன்பங்கள் எல்லோருக்கும் தெரிந்ததாக இருக்கிறது. தெரியாததைச் சொல்லவில்லையே... - ப.திருநாவுக்கரசு**

இந்தத் துன்பங்கள் எல்லோரையும் சென்றடைந்ததாகத் தெரியவில்லை. இது என் அனுபவம். இந்த நூற்றாண்டுத் துன்பங்கள் அடுத்த நூற்றாண்டிலும் அறியப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாகவும் இந்த ஓவியங்கள் இருக்கின்றன.

■ ***கவிதைக்கும், ஓவியத்திற்கும் உள்ள வித்தியாசம் -கவிஞரேறு அமலதாசன்***

ஓவியம் என்பது பேசாத கவிதை. கவிதை என்பது பேசும் ஓவியம். இரண்டுக்கும் பெரிய வேறுபாடு இல்லை. படிக்கப் படிக்கத்தான் கவிதை புரியும். பார்க்கப் பார்க்கத்தான் ஓவியம் புரியும். ஓவியம் என்றால் புரியாது என்ற கருத்து பலரிடம் இருக்கிறது. அது தவறு.

■ ***நவீன ஓவியங்கள் பார்க்கிறவர்களுக்கும், ஓவியங்களுக்குமான இடைவெளியை அதிகமாக்கிவிட்டதே... -கவிஞர் இக்பால்.***

மக்கள் தங்களோடு சம்பந்தப்பட்ட விஷயங்களை தங்கள் மனதுக்குள் ஏற்றுக் கொள்கிறார்கள். பாறை ஓவியங்கள், குகை ஓவியங்கள் போன்றவை மனிதன் ஓவியத்தைப் பேசும் மொழியாகப் பயன்படுத்திய வரலாற்றை உணர்த்துகிறது. புகைப்படக் கலையின் வருகை, ஓவியர்கள் புதிதாக சிந்திக்க வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியது. அதன் மக்களை ஓவியத்திடமிருந்து தூர விலக்கி வைத்துவிடுகிறது. அந்த தூரத்தை விலக்குவதைத்தான் எனது பணியாகக் கருதுகிறேன்.

■ ***புரியாத ஓவியங்களைப் புரிந்து கொள்ள ஏதாவது பயிற்சி கொடுக்க முடியுமா? -உத்திரபாரதி***

'Arts approciation course 'என்று வெளிநாடுகளில் உண்டு. எனது ஓவியங்களைப் பார்த்த பல வெளிநாட்டுக்காரர்கள் 'இது வித்தியாசமான பாணி ' என்று சொன்னார்கள். அந்த அறிவை அவர்களுக்கு இந்தவகைக் கல்வி கொடுத்திருக்கிறது. அதை நமது கல்வித்திட்டங்களும் செய்ய வேண்டும்.

■ ***சிறுகதைக்குப் படம் வரைபவர்களுக்கும் உங்களைப் போன்ற ஓவியர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? -சுப்பிரமணி***

நானும் சிறுகதைக்குப் படம் வரைந்திருக்கிறேன். பெரும்பாலும் சிறுகதைக்கு ஒரு

சம்பவத்தை படமாக வரைவார்கள். ஆனால் கதையின் சாரத்தைக் கொண்டு வருவதுதான் நல்ல படம். ஒரு புத்தகத்தின் அட்டைப்படம் கூட அந்தக் கதையின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பாக இருக்க வேண்டும்.

■ **ஏதாவது நவீன ஓவியங்கள் உங்களுக்கே புரியாமல் இருந்ததுண்டா?**

**ப.திருநாவுக்கரசு.**

உண்டு. ஆனால் ஒரு ஓவியராக இருப்பதால் பெரும்பாலும் என்னால் புரிந்து கொள்ள முடியும். சில ஓவியங்கள் வரைபவர்களுக்கே புரிவதில்லை. அவை யாருக்கும் புரியப் போதும் இல்லை.

■ **பரதநாட்டியம் தவிர மற்ற கலைகளில் சிங்கப்பூர் இந்தியச் சமூகத்தினர் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் எப்படி முன்னேற்றவது? -பாஸ்கரன்**

மலேசியா சென்ட்ரல் மார்க்கெட்டில் எனது ஓவியக் கண்காட்சி நடந்தபோது அந்த வழியாகச் சென்ற மலாய்க்காரர், சீனர், வெளிநாட்டினரில் பலரும் வந்து பார்த்தார்கள். ஆனால் தமிழர்களில் 5 சதவீதம் பேர்தான் வந்து பார்த்திருப்பார்கள். காரணம் சின்ன வயதிலேயே நமது கலை ஆர்வம் அழிக்கப்படுகிறது. படித்தால் போதும் என்று நினைக் கிறார்கள். இந்த நிலையில் போனால் நமது சமூகம் இன்னும் பின் தள்ளப்படும். நமது அடையாளங்களை இழந்து விடுவோம். இந்த நிலையை மாற்றுகிற பொறுப்பு பெற்றோர் களிடமும், ஆசிரியர்களிடமும் தான் இருக்கிறது.

■ **மென்மையான, சுகமான விஷயங்களை ஓவியத்தில் வெளிப்படுத்தும் ஆசையில்லையா? - பாலு மணிமாறன்.**

என்னைச் சுற்றி பல இருள் சூழ்ந்த விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்று முயற்சி செய்கிறேன். ஒரு மனிதனாக நான் பார்க்கிற விஷயங்களும் ஓவியங்களாக பதிவு செய்கிறேன். இதில் அறிவியல் வளர்ச்சி போன்ற விஷயங்களுகம் இருக்கிறது. எனது ஓவியங்களில் மென்மையான விஷயங்களையும் பதிவு செய்திருக்கிறேன். ஆனால் அது இன்னும் சரியாக வெளிப் படவில்லை.

■ **இந்த ஓவியங்களில் மேலை நாட்டு ஓவியங்களின் தாக்கம் இருப்பதாகத் தோன்றுகிறது.. -முனைவர் சபா.ராஜேந்திரன்.**

நாங்கள் படித்ததெல்லாம் மேலைநாட்டு ஓவிய விஷயங்கள். அதன் பாதிப்புதான் இது. நமது பழைய இலக்கியங்கள் பெரும்பாலும் அழகியலையே பாடிக்கொண்டிருந்தது. இன்று நமது வாழ்க்கையும், இலக்கியமும் அதையும் தாண்டிப் போய்விட்டது. தமிழ் பாரம்பரியத்தின் வடிவங்களை ஓவியத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

■ **உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன? -பிச்சினிக்காடு இளங்கோ.**

இந்தச் சமூகத்தில் அழகியலை விட அவலங்களே மேலோங்கி நிற்கிறது. மனித சமூகத்திற்கு எதிரான சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எனது ஓவியங்களில் அதை வெளிப்படுத்துவது மூலம் மக்களது சிந்தனையைத் தூண்ட விரும்புகிறேன். எதிர்காலத்தில் நான் என்ன வரைய வேண்டும் என்பதை நான் வாழுகின்ற சூழலும், காலமும்தான் நிர்ணயிக்க முடியும்.

- www.kumudam.com

## தூரிகையின் உறங்கா நிறங்கள்

**பூங்குழலி**

காண்போர் உள்ளங்களில் உறங்கிக் கொண்டிருந்த பல உணர்வுகளை, நினைவுகளை தட்டியெழுப்ப வந்தது 'ஒரு தூரிகையில் உறங்கா நிறங்கள்' இருபதாம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகளை ஓவியங்களாக நம் பார்வைக்கு அளித்தார் ஓவியர் புகழேந்தி. பிப்ரவரி 7 முதல் 12 வரை சென்னை லலித கலா அகாதமியில் நடைபெற்ற இந்த கண்காட்சி ஆர்வலர்களும் ஓவியர்களும் அறிஞர்களும் மட்டுமல்லாது சாதாரண மக்களும் புரிந்து இரசிக்கும் விதத்தல் அப்பட்டமாகவும் இருந்தது. அதே நேரத்தில் ஓவியர் வீர சந்தானம் கூறியது போல ஓவிய நுணுக்கங்களுக்கும் குறைவிலாது இருந்தது உண்மை. 37 படங்களில் ஒரு நூற்றாண்டையே படம் பிடித்து காட்டுவது கடினம்தான்.

இந்நூற்றாண்டின் துவக்கத்திலே தோன்றிய புரட்சியாளன் லெனினில் துவங்கும் தூரிகையின் பயணம் உலகின் பெரும் போராட்ட வீரர்களையும் போராட்டங்களையும் தொட்டுச் செல்கிறது. செங்குருதி போராட்டங்களோடு சோமாலியா மக்களின் பஞ்சத்திற்கு எதிரான போராட்டத்தையும் எடுத்து காட்டுகிறது. தாய்மைக்கு என்றும் பஞ்சமில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்த அந்த ஓவியம் காண்போரை நெகிழ வைத்தது. உலகச் செய்திகளை தாண்டி இந்திய மண்ணின் சமூக அரசியல் புரட்சியாளர்களை, நிகழ்வுகளைக் காட்டிய பின் தமிழனாய் தன் இனத்தின் போராளிகள் போராட்டங்களையும் பதிவு செய்யத் தவறவில்லை அவர். தாய்த் தமிழகத்தோடு நின்றுவிடாமல் இந்த நூற்றாண்டில் தமிழினத்தின் மிக பெரும் எழுச்சிக்கு வித்திட்ட ஈழப் போராட்டத்தையும் அற்புதமாக படம் பிடித்து காட்டியுள்ளார். காந்திய வழியிலேயே பட்டினிப் போர் புரிந்து நீர் கூட அருந்தாமல் சிறு சிறுக உயிர் நீத்த பெரும் ஈகி திலீபனின் ஓவியம் காண்போர் உள்ளங்களை எல்லாம் கனக்கச் செய்தது. ஓவியர் புகழேந்தியின் இந்த நெடும் பயணம் இந்த நூற்றாண்டில் மட்டுமல்ல இனி வரும் நூற்றாண்டுகளிலும் தமிழர் வாழ்விற்கு அடித்தளமாய் நம்பிக்கை ஒளியாய் திகழும் மாவீரன் பிரபாகரனின் அற்புதமான ஓவியத்தில் இளைப்பாறுகிறது.. ஆம் அவரது பயணம் இனியும் எழுச்சியுடன் தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

*- தென் ஆசிய செய்தி, 1.03.2000*



# மலேசிய மண்ணிலிருந்து ஒரு கடிதம்

**மோகனா முருகேசு**
குவான்தான், மலேசியா

மதிப்பிற்குரிய ஓவியர் புகழ் அவர்களுக்கு,
பணிவான வணக்கம்.

*நலம். நீங்கள் நலமுடன்வாழ எங்கள் அனைவரின் வாழ்த்துக்கள். முதலில் என் அறிமுகம். நான் உங்கள் மலேசிய ரசிகை. சென்ற மாதம் தங்களின் மலேசிய பயணத்தின் போது ஒரு முறை குவான்தானிலிருந்து ( என் வசிப்பிடம்) உங்களை போனில் தொடர்பு கொண்டேன். என் message கண்டு நீங்கள் என்னை அழைத்துப் பேசினீர்கள். பிறகு கடிதம் மூலம் தொடர்பு கொள்ள தங்களின் முகவரியை கொடுத்தீர்கள். சார்... நினைவு படுத்த முடிகிறதா? அன்றிலிருந்து இன்றுவரை எப்படி எழுதுவது? எழுதினால் பதில் வருமா? இலக்கியத் தமிழா அல்லது நடைமுறை தமிழிலா? என எண்ணி எண்ணி ஒரு வாறாக இன்று எழுதியே ஆக வேண்டும் என்ற முடிவோடும், நிச்சயம் நீங்களும் எங்களுக்கு பதில் எழுதுங்கள் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன். இலக்கியத் தமிழ் எனக்கு தெரியாது. குறைகள் இருப்பின் தயவு செய்து மன்னிக்குமாறு கேட்டு கொள்கிறேன். (நிற்க)*

*புகழ் சார், எனக்கு ஓவியம் வரையத் தெரியாது. ஆனால் நன்றாக ரசிப்பேன். எனது பார்வையில் ஓவியர்கள் நல்ல கற்பனைவாதிகள் அழகை மற்றுமே ஆராதிக்கக் கூடியவர்கள் என்றும் சமுதாய சிந்தனை குறைந்தவர்கள் என்ற கணிப்பே இருந்தது. கவிஞர்களும், எழுத்தாளர்களும் மட்டும் தான் தனது படைப்புகளின் வழி சமுதாய உணர்வை சிந்தனையை தூண்ட முடியும் என்ற என் எண்ணம் தங்களின் ஓவியங்களை கண்ட பிறகு தவறு என்று உணர்கிறேன்.*

*தங்களுடைய ஓவியங்களை நேரில் காண இயலாவிட்டாலும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒரு சில ஓவியங்களை பார்த்த போது இந்த ஓவியனால் மட்டும் எப்படி மாறுபட்ட கோணத்தில் சிந்திக்க முடிந்தது என்று வியந்தேன்? உயிரான உங்கள் ஓவியங்களுக்கு வாழ்வுதந்த கவிஞர்களின் கவிதை வரிகளை வாசிக்கும் போது மீண்டும் ஒரு முறை ஓவியங்களின் நோக்கத்தை புரிந்து கொள்ள முடிகிறது. யாழ் வெளியேற்றம், அன்னை தெரசா, பிரபாகரன் மற்றும் பஞ்சம் என்னை மிகவும் கவர்ந்தவையாகும். குறிப்பாக பஞ்சம் என்னுள் ஒரு பெரிய மனத் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனக்கு கர்ப்பினிப் பெண்னை பார்க்க மிகவும் பிடிக்கும். எனக்கு தெரிந்த பெண்கள் யாராவது கர்ப்பமாக இருந்தால் அவர்கள் தேவையை கேட்டறிந்து அவர்கள் இஷ்டப்பட்ட உணவைச் செய்து கொடுத்து மகிழ்வேன். குழந்தையை சுமந்துகொண்டு அந்தத் தாய் நடக்கும் அழகை மிகவும் ரசிப்பேன். பத்துத் திங்களா பல வகையான வலிகளையும் வேதனைகளையும் தாங்கி கொண்டு குழந்தையை ஈன்றெடுக்கும் போது மறுபிறவி எடுக்கும் தாய்மார்கள் அந்தக் குழந்தைக்குப் பாலூட்டும் போது அவர்களின் முகப் பாவங்களையும் அதில் ஏற்படும் நிம்மதி நிறைவு மகிழ்ச்சி போன்ற இன்ப உணர்வுகளையும், சுகமா கண்களை மூடித் தன் பசிப் போகும் மட்டும் பாலருந்தும் மழலைகளின் தோற்றத்தை மணிக்கணக்கில் பார்த்து ரசிப்பேன். ஆனால் தங்களின் அந்த ஓவியம்.. ஒரு துளி பாலுமின்றி ஒட்டிய மார்பு... மழலை பசி தீர்க்க முடியாத அன்னையின் துடிப்பு, பசிக்கு ஒரு துளி பாலாவது சுரக்காதா என்ற அந்த பிஞ்சின் சோர்வு என் நெஞ்சை கசக்கி பிழிந்தது. தாய்மை என்பது கருப்பையில் அல்ல அன்னை தெரேசாவின் மூலம் நீங்கள் உணர்த்தியது. நான் தாயாகவிட்டாலும் என்னுள்ளும் இருக்கும் தாய்மை உணர்வு என்னை மிகவும் வாட்டியது.*

*பத்திரிகையில் அவ்வப்போது சோமாலியர்களின் அவல நிலைகளைக் கண்டு அனுதாப பட்டிருக்கிறேன். என்ன கர்ம வினைகள், தீர்க்க அந்த மண்ணில் பிறந்திருக்கிறார்களோ? என்று நினைப்பதோடு சரி. ஆனால் உங்களின் ஓவியம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. எங்கள் ஊரில் பேரங்காடிகளின் நுழைவாயிலில் ஒரு கண்ணாடி பேழையை உண்டியலாக வைத்திருப்பார்கள். இது சோமாலிய நிவாரண நிதிக்காக. உங்கள் ஓவியம் என் கண்ணில் படும் வரை நான் அந்த உண்டியலில் ஒரு காசுக் கூட போட்டது கிடையாது. ஆனால் இப்பொழுது காசு போட தவறுவதில்லை. தாங்கள் எதிர்பார்க்கும் மனித நேயமிக்க சமூகத்தை உருவாக்கியுள்ளீர்கள். இது உங்களின் வெற்றி தானே*

தாய்மை பெண்களுக்கு மட்டும் சொந்தமில்லை ஆண்களுக்கும் இருக்கின்றது என்பதனை உங்கள் ஓவியம் மூலம் உங்களிடமும் நான் காண்கிறேன்.

தாங்கள் கொண்டு வந்த 37 ஓவியங்களையும் நேரில் கண்டு கவர்ந்ததை வாங்கி உங்களுக்கே கைகுலுக்கி வாழ்த்துக் கூறி autograph பெற்றுக் கொண்டு திரும்பலாம் என்று முயற்சித்தேன். முடியவில்லை. எங்கள் ஊர் கோலாலம்பூரில் இருந்து 365 கி.மீ தொலைவில் இருக்கிறது. காரிலோ, பஸ்சிலோ பயணம் செய்தால் 5 மணி நேரம் தான். இருந்தாலும் என் தொழில் பாதிக்கும். தந்தை முழு பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்து விட்டதால் நான் உடனே எங்கும் கிளம்பி விட முடியாது. மீண்டும் ஒரு Good-bye call செய்தேன். நீங்கள் ஊரில் இல்லை என்று சொல்லி விட்டார்கள். நிறைய ஏமாற்றம். அடுத்த முறை தாங்கள் வந்தால் நிச்சயமாக நாங்கள் அனைவரும் உங்களை நேரில் சந்திப்போம். அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்குமா? திட்டம் ஏதும் இருக்கிறதா? தங்களின் மலேசியா பயணம் வெற்றிகரமா அமைந்ததா? இது தான் தங்களின் முதல் வெளிநாட்டுப் பயணம் என பத்திரிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். வாழ்த்துக்கள்! இந்தப் பயணம் உங்களுக்கு நிறைய புகழையும், வெற்றியை அளித்திருக்குமென நம்புகிறேன்.

புகழ் சார், நயனத்தில் இடம் பெற்ற உங்களின் பேட்டியில் ஓவியக் கருத்து பரிமாற்றங்களையும் நடத்தி புதிய உறவுகளைச் சுவாசிக்கும் மனிதநேச எண்ணத்தோடு வந்திருக்கிறார். என எழுதப்பட்டிருந்தது. எந்தளவு இந்த வாக்கியம் உண்மை என தெரியாது! எங்கள் வீட்டில் நாங்கள் ஒன்றுக் கூடும் கலந்துரையாடலில் தங்களின் ஓவியங்களையும், நண்பன் நயனம் இதழ்களில் தங்களின் பேட்டிகளையும் படித்து நிறைய பேசினோம். ஆக நீங்கள் எங்களுள் ஒருவர். தாங்கள் எப்படி.

என் மடலை நிறைவுக்கு கொண்டு வரும் முன், மீண்டும் கடிதத்தில் எங்காவது தவறாக எழுதியிருந்தால் தயவு செய்து மன்னிக்குமாறு கேட்டு கொள்கிறேன். புகழேந்தி எனக்கு மிகவும் பிடித்தமான பெயர். ஆனால் இந்த பெயரில் எனக்கு நண்பர்கள் எவரும் இல்லை. புகழ் - பெயரைப் போலவே என்றும் அழியாப் புகழோடு வாழ வாழ்த்துகிறோம். உலக அரங்கில் புகழ் புகழ் பேசப்பட வேண்டும். தனது தனி தன்மை வாய்ந்த ஓவியத்தால் அனைத்து மக்களாலும் பேசப்பட வேண்டும், அடையாளங் காணப்பட வேண்டும். இன்னும் நிறைய பட்டங்கள் பெற்று என்றும் நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துக்கள்.

இறுதியாக இந்த அற்புத கலைஞனை ஈன்றெடுத்த, தங்களின் பெற்றோர்களுக்கும் எங்கள் அன்பை செலுத்துகிறோம். அதோடு என்றும் உங்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்து உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்ட அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு கேட்டு கொள்கிறோம். நன்றி.

பின் குறிப்பு

யோசனை புகழ் சார், ஏன் நீங்கள் இணையத்தில் ஒரு அகப் பக்கத்தை திறக்கக் கூடாது. அதன் வழி தங்கள் ஓவியங்கள் உலகளவு பேசப்படுமே! எங்களைப் போல உங்களின் ரசிகர்கள் உங்கள் ஓவியங்களை upto date ஆக பார்க்க முடியுமே!

புகழ் மனசுக்குள் என்றும் புயல்தானா? ( ஆதாரம் - உங்கள் தலைப்புக்கள் பாதிக்கப் பட்டவன், உறங்காத நிறங்கள், எரியும் வண்ணங்கள்) அல்லது தென்றலும் வீசுமா? கைவண்ணத்தின் மென்மை எப்படியிருக்கும்?

மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம் என்ற நம்பிக்கையில் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி.வணக்கம்.

என்றும் அன்புடன்,
மோகனா.



காலத்தைப் பதிவு செய்யும் - காலத்தை வென்று நிற்கும் காவியங்கள் - புகழேந்தியின் - கைவண்ண ஓவியங்களாகி உள்ளன.

அடிமைச் சங்கிலியை உடைத் தெரியும் எண்ண உணர்வுகள் அவரை ஆட்படுத்தி - பல நாட்டுப் புரட்சிக் காவியங்கள் நம் கண் முன்னே கொண்டு வரப் பட்டிருக்கிறது.

நல்ல கவிதை வரிகள் ஓவியங்களுக்கு மேலும் உயிரோட்டத்தை தருகிறது.

இவருடைய உள்ளத்தின் ஆழத்தில் எல்லாத் தளைகளையும் அறுத்தெறியத் துடிக்கும் புரட்சி எண்ணம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இவருடைய ஆழ்மனம் எதைச் சொல்ல விரும்புகிறதோ அதில் வெற்றி பெருவார்.

**சி.நா.மீ. உபயதுல்லா**
தஞ்சாவூர்

வண்ணத்தில் தெரியும், சிவப்பு அவர் எண்ணத்தைக் காட்டுகிறது. சிவப்புச்சிந்தனைகள் எந்நாளும் தோற்றதே இல்லை.

அவர் உழைப்பு என்றும் வெல்லும்.

**மு.நாராயணசாமி**
திருச்சி

கொடுமைக்கெதிராகக் குமைந்து கூனிவிடாமல் கொதித்து குமுறும் எரிமலைக் குழம்பில் குழைத்தெடுத்த வண்ணங்கள் வடிவம் கொண்டுள்ளதைக் காண முடிந்தது.

கருத்துகளைக் கவிஞர்கள் பொருத்தமான முறையில் கவிதையாக்கித் தந்துள்ளனர்.

ஓவியக் கண்காட்சி முன்னெப் போதையும் விட நிமிர்வுடனும் பொலிவுடனும் காட்சியளிக்கிறது. ஓவியர் புகழேந்தியின் உள்ளத்தைப் போலவே.

**சி.அறிவுறிவோன்**
தஞ்சை

When I saw a whole your paintings were I dreams I want to be like you ( K.Pugazhenthi) All your paintings are very very nice and I am very interested about the paintings contents.

**Mohd Norazmi**
Malaysia

When I saw your artwork especially the worldwar honestly I must that now true it. All those victories from all those wars are for whom? The really have such a good way to bring the past to the present

**Mohd Amin Mohd Arif**
Malaysia

Every single drops of paint from your brush shows the world the greats and the people who suffers I, personally hope that using your potent. The World will make a good changes.

**Rameswaran**
Malaysia

It is a rare opportunity to finally see and interact with a genuine Indian artist that have the capability to express his feeling with minimal use of colours, spaces and figures... I love it remember that there is no rules in Arts.....Cooooooool !!

**Fathullah**
Malaysia.

Very impressive I'm torched with the FAMINE artwork. An excellent way to impress feeling and emotions Great art work !!

**Naneen Hassan**
Malaysia

The Paintings speaks straight to the heart it speaks louder to the Heart than through out eyes. It gives us food for thought. May it reflect to all to turn their search lights inwards. It is an added beauty to me

**A.a.loganathan**
Malaysia

உலகில் நடந்தும் நடந்துக் கொண்டு இருக்கும் சம்பவங்களை கலை உணர்வோடு காண வாய்ப்பளித்த சகோதரர் புகழேந்திக்கு நன்றியும் வாழ்த்துகளும், பஞ்சம், இலங்கை துயரம் இவை இன்னும் எவ்வளவு காலத்துக்கு!

**ப.பரமேஸ்வரி**
மலேசியா

பூமியிலிருந்து வீசப்பட்ட
ஜனநாயகப் பிரகடனக் காலடி
கைத்தடியின்றி தெறிக்குமொரு
கருஞ்சிவப்பு புன்னகை
துப்பாக்கியின்றி
புறப்பட்ட
அகிம்சைப் புயல்
உயிர்த்துடிப்பின் சப்தம்
வறட்டு மார்பிலிருந்து
வழிகிறதே !
சோமாலியாவே

எங்கள் ஓவியன் பார்வையில்
அழுகையின் பேரோசை
யாழ் நூல் தீக்கங்குகளைத் தழுவியது
செம்பருத்தி மண்ணிலிருந்தும்
உங்கள் பயணத்தில்
ஜரத்தக் கண்ணீர் வழிந்தது.
நட்சத்திரங்களை தரிசித்து
சூரியனைப் பிரசவித்திருக்கிறார்கள்
நிலா வீசிடினும் பெருமையின்
புகழ்
வரி வடிவாகத்
துடித்துக் கொண்டிருக்கிறது.

**கோ.முனியாண்டி**
மலேசியா

உங்கள் உணர்வுகள் உலகின்
இதயத்தைக் கீறுகின்றன
வடிவது ரத்தமல்ல
உயிர்
ஓர் இதயமுள்ள ஓவியரைச்
சந்தித்ததில் எங்கள்
சந்ததியே பெருமை கொள்ளும்

**எம்.ஏ.இளஞ்செழியன்**
மலேசியா

வரலாற்றின் ஊடே பயணம் செய்து விட்டு வந்த உணர்வு நிறைந்துள்ளது. ஓவியமும் கவிதையும் ஒன்றுக்கொன்று போட்டி போடுகிறது. அரசியல் நிகழ்வுகளை இவ்வளவு அருமையாக காட்சிப் படுத்த முடியுமா? இந்த ஓவியங்களில் தூரிகை தமிழனின் முதுகை நிமிர்த்த உதவட்டும். அந்தப் பணி தொடரட்டும்.

**மணிமாறன்**
மலேசியா

ஓவியங்கள் அறிவையும் உணர்வையும் ஒருங்கே உருவாக்குகின்றன. மாந்தனின் வரலாறு வார்ப்படமாய் விரிந்துள்ளன.

**கோ.பிச்சைவள்ளிநாயகம்**
சென்னை

ஓவியங்கள், மக்களின் மனதை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டாமல், நவீன ஓவியங்கள் என்ற பெயரில், அனைத்து மக்களுக்கும் புரியாமல் வரையாமல் நூற்றாண்டின் பதிவுகளை தெளிவென விளக்கி, எளிமையான தமிழ் வார்த்தைகளில் கனமான கருத்துக்களை வெளியிட்டிருக்கும் ஓவியர் புகழேந்தி தமிழக ஓவியர்கள் பெயரை தன் பாணி மூலம் பாசத்தைத் தொட்டு விடுவார் என்பது நிதர்சனம்.

**அசோக்**
மதுரை

ஓவியங்கள் அனைத்தும் கண்ணையும் கருத்தையும் கவர்வதோடு சூழ்ந்து யோசித்து உள்ளத்து உணர்வுகளை சமுதாய விழிப்புணர்வுக்கு தூண்டுபவையாக இருந்தன. ஓவியர் புகழேந்திக்கு வாழ்த்துக்கள் பல.

**டி.அ.பாலா**
சென்னை - 2.

ஓவியர் புகழேந்தியின் ஓவியங்களை பார்க்கிற போது இருபதாம் நூற்றாண்டில் உலகை வலம் வந்தது போன்று இருந்தது. ஓவியர் முயற்சிகள் இன்னும் வளம் பெற்று தொடர வாழ்த்துக்கள்.

**ம.மதுமலர்**
சென்னை

Very Powerful communication through images. Bold presentation of color. I would like to see titles in English in Future. Your continued communication will inspire more discussion to spread consciousness throughout the world ! Great show.

**Brain Canevari**
USA.

இங்கு இடம் பெற்றுள்ள படைப்புகள் உணர்வோடு மட்டுமல்ல அறிவுக்கு இனிய விருந்தாக அமைந்துள்ளதைக் கண்டு பேருவகை யடைகிறேன். ஒவ்வொரு படைப்பும் வெளிப் படுத்தும் தகவல்கள் காலத்தால் மறக்க முடியாத நிகழ்வுகள், நிகழ்வுகளுக்கு அடிதளமாய் அமைந்த மாமனிதர்களை, அவர் தம், சிந்தனை செயல்பாடுகளை விண்டுரைப்பனவாக அமைந் துள்ளன என்பதில் ஐயமில்லை. தடம் பதித்த சுவடுகள் அழியா ஓவிய நிஜங்கள். திரு. புகழேந்தியின் புகழுக்கு மேலும் மகுடம் சூட்டுவேன். அவர் தம் திறன் வளர்க்க வாழ்க.

**மணவை முஸ்தபா**
சென்னை

மனித வரலாறுகள் பேசுகிறேன்!
மனித உணர்வின் தியாகம் பட்டென வெளிச்சமாக்குகிறது! சிந்திய வியர்வை துளிகளே காண முடியா இவ்வுலகிலே
இந்திய இரத்த துளிகள் இம்மானிட உலகுக்காக! புதிய வரலாறுக்காக! மெய்சிலிர்க்க வைக் கின்றது! இளைய சமுதாயம் புத்துலகம் படைக்க இதைவிட
வேறு ஒரு தத்ரூபமான சான்றிதழ் கொடுக்க முடியுமோ! அண்ணன் புகழேந்தியே! உம்மை புகழ்வதற்கு முன்

பெயரிலே ஆண்டவன் புகழை வைத்துவிட்டானோ!
வாழ்த்துக்கள்! வளர்க மனிதம்!
புது விடியல் பிறக்க
எங்கள் தோழமை என்றும்!

**இராஜேஸ்வரி**
**சென்னை**

இருபதாம் நூற்றாண்டு நிகழ்வுகளை பாதிப்புகளை தன் ஓவிய பார்வையில் பதிவு செய்திருக்கும் ஓவியர் புகழேந்தியின் முயற்சி பாராட்டுக்குரியது.

மகாத்மாவையும், பிரபாகரனையும் பதிவு செய்திருப்பதில் அவரது பரந்து பட்ட பார்வை புரிகிறது. அன்னை தெரசா, வெண்ணி பதிவுகளில் மனித நேயம், மனித உரிமை மீறல் ஆகியவற்றின அழுத்தம் அற்புதமாக உள்ளது. வரலாறு என்பது நல்ல மனித நேயர்களுக்கு மட்டுமல்ல மக்கள் விரோதிகட்கும் உண்டு என்பதை உணர்த்தும் சுடராய் ஒளிர்பவை ஓவியம். முயற்சி பாராட்டுக்குரியது. தனது ஓவியங்களில் தன்னை வெளிப்படுத்தி உள்ள ஓவியருக்கு பாராட்டுக்கள். நன்றி

**அருணாசலேசுவரன்**
**சென்னை**

நவீன ஓவியங்கள் முதன் முதலில் புரிந்தது, விளங்கியது இப்போதுதான். ஒவ்வொரு ஓவியமும் சரியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தமிழனின் கலை ஆற்றல் உலகை செல்லும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

**தி.பெரியார் சாக்ரடீசு**
**சென்னை - 24.**

என்னாலும் புரிந்து கொண்டு ரசிக்கக் கூடியவை யாக அனைத்து ஓவியங்களும் முதல் முறையாக கண்காட்சியிலிருந்து மிகுந்த மகிழ்ச்சியுடன் திரும்புகிறேன்.
...
தமிழுக்குக் கிடைத்த இருபதாம் நூற்றாண்டு ஓவியன் புகழேந்தி என்று கூற முடியும்.

**மா. அரங்கநாதன்**
சென்னை.

போராளிகள் எழுத்துப் போராளிகள், ஆயுதப் போராளிகள், கருத்துப் போராளிகள் உரமேற்றும் போராளிகளுக்கு நடுவே உருக வைத்த சோமாலயா உருகுகிறேன் மேலும் மேலும் மேலும் இறுகவே.

**அ.தமிழன்பன்**
நந்தன்

கரிசனம் என்பது அக்கறையில்லை;
கரிசனம் என்பது அவதானமில்லை;
கரிசனம் என்பது பிறர் துன்பத்துக்கு உருகத் தெரியாது
எங்கோ நடக்கும் கொடுமைகளுக்காய் கோபப்படத் தெரிவது.
கரிசனமும் செய்நேர்த்தியும்தான்.
கலைத்துவமான படைப்புக்களை
உருவாக்குகின்றன. கலைத்துவத்தின்
உச்சமான பல படைப்புகளும் இன்றும்
என்றும் என்னுள் அதிர்ந்து தொந்திரவு செய்யும்.

**தேவகாந்தன்**
சென்னை

இறந்த காலத்தை வரையும் கையாக மட்டுமல்ல எதிர்காலத்தின் நம்பிக்கை யாவும்
எழுந்து நிற்கிறது புகழேந்தியின் தூரிகை
கண்களோடு மட்டும் காணவருகிறவர்களுக்கு
ஒரு புதிய இதயத்தைக் கொடுத்தனுப்புகிறது
இவரது வண்ணங்கள்.
இந்த வண்ணங்கள் வண்ணங்களல்ல
நமது தலைமுறையின் கண்ணீரும் இரத்தமும்.

**பழநிபாரதி**
சென்னை

ஒரு தூரிகையின் மூலம் உலக வரலாற்று நிகழ்ச்சிகள் பதிவுச் செய்யப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு படத்திற்கும் விளக்கம் கவிதை வடிவில் தந்திருப்பது பார்ப்போருக்கு மனத்தில் ஈர்ப்பை ஏற்படுத்தி விடுகிறது.
புகழேந்தியின் திறமை மேலும் வளர்ந்து ஓங்கட்டும் என வாழ்த்துகிறேன்.

**திருநாவுக்கரசு.**

இருபதாம் நூற்றாண்டை தனது தனிப்பார்வை கொண்டு பார்க்கிறார் புகழேந்தி. பார்வையில் கோபமும் வருத்தமும் மிகுந்தோங்கி இருந் தாலும் அமைதியும் அடக்கமும் இழையோடு கின்றன.
பிடித்தது
பாரதிதாசன் புதுமைப்பித்தன் - இவர்களது
தேடுதலான பார்வைகள்
பெரியார் முகத்தின் கருணை
பெண்மையின் இயலாமை கலந்த சீற்றம்
மண்டேலாவின் உடைந்த சிறை கம்பிகள்
காந்தியின் சோகம் அவர் கால்களின் வலிமை
அம்பேத்கரின் உறுதி
ஆர்ம்ஸ்ட்ராங்கின் வெற்றி
காஸ்டரோ குவேராவின் நட்பு

கீழ் வெண்மனியின் உக்ரம்
குறைவாகப் பிடித்தது
நம்பமுடியாத கருணைப்பார்வையோடு பிரபாகரனை சித்தரிப்பது சரித்திரம் வேறு வார்த்தைகளைப் பேசுகிறது. ஜாலியன் வாலாபாக் மிகவும் எளிமைப்படுத்தப்பட்டது போல் உள்ளது.

**ஸ்ரீகாந்த் மீனாட்சி**
அமெரிக்கா

வரலாற்றில் உறங்காத நிகழ்வுகளை
வண்ணங்களில் வார்த்திருக்கிறது
புகழேந்தியின் தூரிகை உறங்கா நிறங்கள்
21-ஆம் நூற்றாண்டின் புதிய விடியலை
ஓவியத்தில் முன்மொழிகின்றது.

**எஸ்ராஜகுமாரன்**
சென்னை - 18

உலகத்தையும்
உணர்வுகளையும்
சொல்ல
இதற்குமேல்
ஒன்றுமில்லை!

**வி.சி.வில்வம்**
சென்னை - 7

ஏனைய நாடுகள் எனது தேசம்.. எனது ஊர் என்று காலம் இடம் என அனைத்திலும், பொங்கிய கண்ணீர்சிந்திய நெஞ்சில் அனைத்தும் கவனமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஆழ்ந்த வண்ணங்கள் எழுப்பும் உணர்வலைகள் எண்ணற்றவை. கரிந்து கிடக்கும் யாழ் நூலகம் இறந்து கிடக்கும் திலீபனும் இனி உறங்கா இரவுகளை உருவாக்கும். வரலாற்றைச் சமைக்கும் வரலாறு இது.

**பாரதிபுத்திரன்**

கடந்த நூற்றாண்டின் கொடூரங்கள், நம்பிக்கைகள் வண்ணங்களாக, வடிவங்களாக நெஞ்சத்தில் விதைக்கப்பட்டுள்ளது. கடந்த நூற்றாண்டின் சோகம். ஆதிக்கம் கொடுமை என்னை வேதனைப்படுத்தினாலும் புதிய நூற்றாண்டின் இனவிடுதலைப் போர் பெண்கள் எழுச்சி நெருப்பாய் கணக்கிறது. நல்ல முயற்சி! பணிக்கு என்றும் தோழமை.

**வைதேகி**

போர்க்குணமுள்ள வண்ணங்களைச் சந்தித்தேன். மனிதனிடமுள்ள போர்க்குணம் மறைந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கை நம் அனைவருக்கும் .. போராட்ட தொடர்ச்சி பற்றி ஓவியரின் புரிந்துணர்வு என்னை மகிழ்வித்தது. ஓவியங்களும் வண்ணங்களும் துல்லியமாக தெளிவைக் கொண்டுள்ளன.

**சி.மகேந்திரன்**

How to express it? Really I am surprised. Its the first incident in my view about the century's art exhibition. Mr. Pugazhenthi helps me to went into the past and obsolutely I am sure about his colour mixing is a great job. especially that "SOMALIAN" picture impressed me very much. I wish him my best wishes.

**Prasad**

கலைகள் யாவும் மக்களுக்காகவே! விடுதலையின் பற்பல பரிமானங்களையும், அவற்றின் ஆளுரு வங்களையும் உயிரோவியங்களாக்கித் தந்திருக் கிறார். ஓவியர் புகழேந்தி. தூரிகை என்னும் படைக்கலன் ஏந்திய ஒரு விடுதலைப் போராளி யாக அவர் இந்த ஓவியங்களும் எனக்குப் புதிதல்ல என்றாலும், இங்கே இன்றுதான் அவர் வரைந்து ஈரம் காயாத நேர் ஓவியங்களைக் கண்டேன். அவை தந்த பரவச அனுபவம் மகத்தானது. எல்லாமே மிகச் சிறந்த ஓவியங்கள் தாம்! என்றாலும் மனசுக்கும் மதிப்பெண் கொடுத்து பரிசுப் படிக்கட்டில் நிறுத்திப் பார்த்ததில் திலீபனுக்குத்தான் முதலிடம். மரணத்தையும் வாழ்ந்து காட்டிய அந்த மாவீரனின் தியாகத்தை இந்த ஓவியத்தில் உயிர்ப்பித்துக் காட்டி விட்டது. புகழின் தூரிகை! இவ்வளவு அருமையான ஓவியக் கண்காட்சியைக் காண எவ்வளவு பெரிய கட்டம் வந்திருக்க வேண்டும்! வந்ததா, தெரியவில்லை. வரும் இலட்சியத்தை மூச்சாய்க் கொண்டு வாழும். படைக்காளிகளுக்கு என்று காலம் வரும். அந்தக் காயம் நம் மக்களுக்கு வசந்தமாய் வரும். வாழ்க புகழேந்தி! வளர்க அவரது ஓவிய முயற்சிகள்!

**தியாகு**

ஓவியர் புகழேந்தி தன் கண்கள் ஊடாக இந்நூற்றாண்டைப் பார்த்துள்ளார் வரலாறு என்பது காலத்தின் ஓட்டமல்ல. அது காட்சிகளின் பதிவு. அக்காட்சிகள் மனச்சாட்சியைப் பாதிக்கின்றன. மனமுள்ளோர் அனைவரும் சில காட்சிகளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்கிறோம். அவ்வரிசையில் சில காட்சிகள் அக்காலத்தின் சாராம்சமாக, முத்திரைகளாய் நின்று போகின்றன. அக்காட்சிகள் மாற்றமுடியாத

கல்வெட்டுக்களாய் நின்று போகின்றன. இவை நாற்பது ஓவியக் கல் வெட்டுகள். இவை வாழ்வைப் பேசும் காலம் கடந்து பேசும். இந்நாற்பது கல் வெட்டுக்களையும் என் நெஞ்சக் கூட்டில் தூசு படியாமல் வைத்துக் கொள்ள விரும்புகிறேன். விடுதலையை, மானுடத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் இவ்வோவியங்களை மறக்காமல் சுமப்பார்கள். புகழேந்தியின் வரலாற்று முயற்சிக்கு என் நெஞ்சார்ந்த வணக்கம்.

**அ.சேவியர் அருள்ராசு**

சிலபேர் ஏதாவது எப்பொழுதாவது புதுசாய் செய்ய சிந்திக்கிறோம். புகழேந்தி செயல்படுத்தி யிருந்தது. இது எந்த ஓவியனுக்கும் தோணாத விஷயம். இது பற்றிய புகைப்படங்கள் எவ்வளவோ இருந்தாலும் காலத்துக்கும் பதிந்து விட்ட ஓவியங்கள் எனும்போது வலுக்கூடுகிறது. நான் நினைத்து உள்ளே நுழைந்த புகழேந்தி மேலுக்குப் போய் என்னன்னமோ இன்னும் நிறைய செய்யப் போகிறார். இதைப் பார்க்கக் கொடுத்து வைக்காதவர்கள் மூடர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவது மாதிரிதான்.

**தங்கர்பச்சான்**

சமூக உணர்வினை அடித்தளமாகக் கொண்டு சமூக பொறுப்புணர்வைத் தூண்டும் வகையில் அமைந்த இக்கண்காட்சி தமிழக ஓவிய வரலாற்றில் ஒரு மைல் கல்லே.

**செ.அ.வீரபாண்டியன்**

ஓவியக் கண்காட்சிகளுக்கான உதாரணக் கண்காட்சி இது.

புகழேந்தியின் ஓவியங்கள் அனைத்தும் மனித குல வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது தெளிந்த வாழ்க்கையை உணரத் தூண்டுகிறது. போராட்டங்கள் இங்கே ஓவியங்களாக இருக்கிறேன்.

**ஜெயபாஸ்கரன்**

உப்பரிகைக்கு மட்டுமே சொந்தமானது ஓவியம் என்று சொல்லப்பட்டதை உடைத்த ஓவியக் கண்காட்சி இது. இதில் உள்ளமும் இருக்கிறது. இந்தியாவும் இருக்கிறது. உலகமும் இருக்கின்றது. எல்லாமே சிவந்து இருக்கிறது. காந்தியின் முகத்தில் துக்கம் தெரிகிறது. பெரியாரின் முகத்தில் மகிழ்ச்சி எட்டிப் பார்க்கிறது. இவையே இதன் பெரிய செய்தி இது போதாதா? புகழேந்தி பெயருக்குப் பாத்திரமானவர். ஓவியத்திற்கு உயிரானவர்.

**ச.செந்தில்நாதன்**

வண்ணங்களுமே கோடுகளும் கடந்து நூற்றாண்டு வரலாற்றின் நிகழ்வுகள் சிலவற்றை மிக முக்கியமான சிலவற்றை நம் கருத்திற்குள் நிறுத்தி ஓவியர் புகழ் கிளர்ச்சி செய்கிறார்.

**தமிழன்பன்**

நான் ஓவியத்தைப் பற்றி அதிகம் தெரியாதவன், பல ஓவியங்களைப் பார்த்து புரியாமல் நின்றவன் ஆனால் இந்த ஓவியங்கள் எனக்கு புரிதல் -வளர்தல் - அறிதல் - ஆகிய மூன்றையும் தந்தன, சமுதாய உணர்வு கொண்ட ஒரு ஓவியனின் தூரிகையால் உணர்வுகளைத் தட்டி எழுப்ப முடியும் என்ற உணர்வை நான் பெற்றேன். இந்த இளம் ஓவியர் சமுதாய விடியலுக்கு தன்னை மேலும் மேலும் அர்ப்பணித்திட முன் வரவேண்டும் என்ற வேண்டுகோளோடு.

**விடுதலை இராசேந்திரன்**

விரலேந்தி நின்ற தூரிகை
புகழேந்தியால் ஒரு வரலாற்றுச்
சின்னமாகிவிட்டது.
அமெரிக்க வல்லாண்மைக் கொடுமையின்
வடிவமாக மைலாய்
மனதைப் பிழிகிறது
அந்தப் பேராதிக்கத்தை ஆசிய மண்ணில் முறியடித்த
பெருமகன் ஹோசி மின் நினைவு நிழலாடுகிறது
அடுத்துவரும் ஓவியக் காட்சியில் அவனையும் இணையுங்கள்
விடுதலை பெற்ற தமிழகத்தில்
புகழேந்திக்காக ஒரு வெற்றிக் காவியம்
காத்திருக்கிறது.

**தணிகைச் செல்வன்**
சென்னை

